# ‘பௌத்த நாடு’ மாறும் வரை இங்கே நிலைமாற்றமில்லை

**சமந்தாவிடம் சொன்னார் மனோ**

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் நிர்வாகி சமந்தா பவருக்கும், இலங்கையின் ஏழு எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும்... 02 பக்கம்

Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 59 சுபகிருது வருடம், ஆவணி மாதம் 27ஆம் திகதி திங்கட்கிழமை

(12.09.2022) ஹிஜ்ரி 1444, ஸஃபர் - 15 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

# ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியனானது இலங்கை




08 பக்கம்

## மனித உரிமைகள் பேரவையின் அங்கத்துவ நாடுகள்




- ஆபிரிக்க நாடுகள்
- ஆசிய - பசுபிக் நாடுகள்
- கிழக்கு ஐரோப்பிய நாடுகள்
- லத்தீன் அமெ., கரிபியன் நாடுகள்
- மேற்கு ஐரோப்பிய நாடுகள்
- ஐ.நா. உறுப்புரிமை பெற்ற குழுக்களில் அடங்காத நாடு




## ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவை

- ஐக்கிய நாடுகள் சபையின் மிக முக்கியமானதொரு அமைப்பாக மனித உரிமைகள் பேரவை விளங்குகிறது.
- ஐக்கிய நாடுகளின் உறுப்புநாடுகளில் மீறப்படும் குற்றச்சாட்டுகளை இந்தப் பேரவை விசாரணை செய்கிறது.
- நாட்டின் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், மத நம்பிக்கை மீதான சுதந்திரம், பெண்கள் உரிமைகள், பாலியல் சமத்துவம், இனங்களுக்கிடையிலான உரிமைகள், சிறுபான்மையினருக்கான உரிமைகள் குறித்து இந்தப் பேரவை அவதானம் செலுத்துகிறது.

**அண்மைய அறிக்கைகள்**

08.07.2022 – போராட்டங்களின்போது வன்முறையைத் தடுப்பதற்கு படையினர் நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டுமெனக் கோரிக்கை.

22.07.2022 – நாட்டின் பொருளாதார நெருக்கடி மனித உரிமைகளில் கடும் தாக்கத்தை செலுத்தியுள்ளதாக தெரிவிப்பு.

08.08.2022 - அவசரகால நிலைமையை பயன்படுத்தி அமைதிவழி போராட்டக்காரர்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றமைக்கு எதிர்ப்பு

06.09.2022 – பொறுப்புக்கூறலில் முன்னேற்றம் இல்லை. போர்க்குற்றம் புரிந்தோரை இலக்கு வைக்க உலக நாடுகளிடம் வேண்டுகோள்.

- தலைமையகம் : ஜெனீவா, சுவிட்ஸர்லாந்து
- உருவாக்கம் : மார்ச் 15, 2006
- உருவாக்கப்பட்ட நிகழ்வு : ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தொடர்
- அங்கத்துவ நாடுகள் : 47
- அங்கத்துவ காலம் : 3 ஆண்டுகள்

**2022 – 51 ஆவது கூட்டத்தொடர்**

- காலம் : 12 செப்டெம்பர் – 07 ஒக்டோபர்



இலங்கை குறித்த அறிக்கையை பிரதி ஆணையாளர் நாடா அல் நாஷிப் இன்று பேரவையில் சமர்ப்பிப்பார்

**வீட்டோ அதிகாரம்**

- சீனா
- பிரான்ஸ்
- ரஷ்யா
- இங்கிலாந்து
- அமெரிக்கா

**மனித உரிமைகள் ஆணையாளர்**



பெயர் : வோல்க்கர் டர்க்
நியமனம் : 08.09.2022
நாடு : ஒஸ்ட்ரியா
பதவி : ஐ.நா. செயலாளரது சர்வதேச கொள்கைகளுக்கான செயலாளர்
பட்டம் : ஒஸ்ட்ரியா, லின்ஸ் பல்கலைக்கழகத்தில் சட்டம். வியன்னா பல்கலைக்கழகத்தில் சர்வதேச சட்டம்.

Infographic : udesh_gr © Thamilan Graphic Desk

# ஐ.நா. சமர் இன்று ஆரம்பம்

**இரு நாள் விவாதம்**

## எதிர்க்கட்சி எம்.பிக்களான முஜிபுர், காவிந்த ஜெனீவா விரைவு

நமது விசேட செய்தியாளர்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவில் இன்று ஆரம்பமாகவுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராக பதவி வகித்த மிச்செல் பச்லேவின் பதவிக்காலம் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளதையடுத்து, பிரதி ஆணையாளர் நாடா அல்-நாஷிப், இலங்கை குறித்த அறிக்கையை இன்று பேரவையில் சமர்ப்பிக்கவுள்ளார்.

ஏற்கனவே வெளியாகியுள்ள அறிக்கையின் பிரகாரம் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் போர்க்குற்றவாளிகளுக்கான தண்டனை குறித்து இதன்போது வலியுறுத்தப்படவுள்ளது.

02 பக்கம்

# மகாராணியின் மறைவுக்கு ஜனாதிபதி அனுதாபக் குறிப்பு



## இறுதிச் சடங்கில் பங்கேற்க 19இல் லண்டன் பயணம்

02 பக்கம்

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தங்களை ஏற்க முடியாது



## அது முற்றாக நீக்கப்பட வேண்டும் என்கிறார் சித்தார்த்தன் எம்.பி.

யாழ். செய்தியாளர்

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தங்கள் செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. அந்தச் சட்டமே முழுமையாக நீக்கப்பட வேண்டும் என... 02 பக்கம்

# நாடாளுமன்ற உடன்பாடின்றேல் சர்வஜன வாக்கெடுப்பு!

## தேர்தல் சீர்திருத்தம் குறித்து ஜனாதிபதி ரணில் திட்டவட்ட அறிவிப்பு

"தேர்தல் சீர்திருத்தம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் உடன்பாடு எட்டப்பட வேண்டும். இது தொடர்பில் கட்சிகள் ஆராய்ந்து வருகின்றன. அவர்களுக்கு ஆறு மாதங்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. கட்சிகளிடையே உடன்பாடு ஏற்படாவிட்டால் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி, உகந்த தேர்தல் முறை தொடர்பாக மக்களிடம் விருப்பத்தைக் கோருவேன். அரசியல் கட்சிகளால் இந்தப் பிரச்சினைகளை என்றைக்கும் தள்ளிப்போட முடியாது" - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இருநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வந்துள்ள சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் நிர்வாகி சமந்தா பவருடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் தடுப்புக்காவலிலுள்ள முஸ்லிம்களில் விடுதலை செய்யக்கூடியவர்களை அடையாளம் காணுமாறு புலனாய்வுப் பிரிவுகளுக்கு அறிவித்துள்ளேன்.

02 பக்கம்

# விவசாயிகளுக்கு 40 மில். டொலர்



## அமெரிக்கா நிதியுதவி

நாட்டின் விவசாயிகளின் தேவைகளுக்காக 40 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்குவதாக சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் (USAID) ... 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..

என்னது? திரும்பவும் அரசியலுக்கு வரமாட்டாராமோ? வந்திட்டா மட்டும்...



# அரிசி, கோதுமைக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்

## இந்தியாவின் கட்டுப்பாட்டால் பாதிப்பு

யோ.தர்மராஜ்

அரிசி ஏற்றுமதியை கட்டுப்படுத்துவதற்கு இந்தியா தற்போது எடுத்துள்ள முடிவால், இந்தியாவிலிருந்து அரிசியை இலங்கைக்கு இறக்குமதி செய்வதில் பாரிய சிக்கலை சந்திக்க நேரிடும் - என அரிசி இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர். 02 பக்கம்

# இராஜாங்க அமைச்சர்கள் பெறும் விசேட சலுகைகள்

## அநுர எம்.பி. சுட்டிக்காட்டு

யோ.தர்மராஜ்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் கடந்த வாரம் நியமிக்கப்பட்ட இராஜாங்க அமைச்சர்களுக்கு சம்பளம் இல்லாவிட்டாலும்,... 02 பக்கம்

## உஷ்



சில தினங்களுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவை சந்தித்தாராம் ஜனாதிபதி ரணில். பல விடயங்கள் குறித்து கருத்துப் பரிமாற்றம் செய்துகொண்டார்களாம்.

இனிமேல் அரசியலுக்குள் வரமாட்டேன். அமெரிக்காவுக்குச் சென்று குடும்பத்தினருடன் ஓய்வெடுக்கப் போகிறேன் என்று ரணிலிடம் கூறினாராம் கோட்டா.



எந்த இடத்திலிருந்தாலும் அதே இடத்திலிருந்தவாறு
சேமிப்பு கணக்கொன்றை இலகுவாக ஆரம்பித்திடுங்கள்

PEOPLE'S PAY

இப்போது PEOPLE'S PAY APP ஊடாக இருந்த இடத்திலிருந்தே சேமிப்பு கணக்கொன்றை அக்கணமே ஆரம்பியுங்கள்.

1. People's Pay app I Download செய்யுங்கள்
2. உங்கள் விபரங்களை உள்ளிடுங்கள்
3. டிஜிட்டல் சேவைகளுக்கு விண்ணப்பியுங்கள்
4. உங்கள் பொருத்தமான நேரத்திற்கு Non face to face call ஒன்றுக்காக நேரத்தை ஒதுக்கிக்கொள்ளுங்கள்

நீங்களும் இன்றே People's pay app பெற்றுக்கொடுக்கும் சிறந்த வசதிகளைப் பெற்றுக்கொண்டு நீங்களும் உங்கள் சுதந்திரத்தை அனுபவித்திடுங்கள்

மக்கள் வங்கியில் வைப்பு செய்யும் வைப்புக்கள் அனைத்தும் இலங்கை வைப்பு காப்புறுதி திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

www.peopleslank.lk 1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK
Pride of the Nation

AA- (lka) ஃபிட்ச் ரேட்டிங், AAA- பிராண்ட் ஃபினான்ஸ் ரேட்டிங்
மக்கள் வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

# கோணேஸ்வரர் ஆலய காணி அபகரிப்பு முயற்சி; சைவ அமைப்புகள் ஒன்றுகூடி யாழில் ஆராய்வு

## தமிழ் எம்.பிக்கள் நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டம் முன்னெடுக்க வேண்டுமென கோரிக்கை







(யாழ். செய்தியாளர்)

ஈழத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க, தேவார பாடல் பெற்ற தலமான திருக்கோணேஸ்வரம் ஆலயத்துக்குச் சொந்தமான காணி ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அதைத் தடுக்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் நேற்று (11) விசேட சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

யாழ். நல்லூரில் உள்ள இந்து மாமன்றத்தின் அலுவலகத்தில், நல்லை ஆதீன முதல்வர் தலைமையில் ஒன்றுகூடிய சைவ அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்த விடயம் தொடர்பாக விரிவாக ஆராய்ந்தனர். இச்சந்திப்பில் திருக்கோணேஸ்வரம் ஆலய பரிபாலன சபையின் பிரதிநிதிகள், யாழ்ப்பாணத்தில் உள்ள சைவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், சி.சிறிதரன் போன்றோரும் கலந்துகொண்டனர்.

இங்கு கருத்து தெரிவித்தவர்கள் திருக்கோணேஸ்வரம் சைவத் தமிழர்களின் சொத்து என்றும் இதைப் பாதுகாப்பதற்கு அரசியல்வாதிகள் உட்பட சைவ அமைப்புகள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நாடாளுமன்ற வளாகத்தில் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் எனவும் இங்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஆலயம் ஆக்கிரமிக்கப்படுவதை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இந்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பது எனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

### மகாராணியின்...

கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்திற்கு நேற்று (11) முற்பகல் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் வரவேற்றார்.

அதன் பின்னர் அங்கு வைக்கப்பட்டுள்ள விசேட நினைவுப் புத்தகத்தில் அனுதாபக் குறிப்பை எழுதிய ஜனாதிபதி ரணில், 07 தசாப்தங்களாக இரண்டாம் எலிசபெத் மகாராணி, உலக மக்களுக்கு ஆற்றிய அளப்பரிய சேவையை நினைவுபடுத்தினார்.

இதேவேளை, எதிர்வரும் 19ஆம் திகதி லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் நடைபெறும் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்குகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்ளவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

### ஐ.நா.சமர்...

இதேவேளை, இலங்கை குறித்த விவாதமும் இன்றைய தினம் இடம்பெறவுள்ளதுடன், வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி அரசாங்கத்தின் நிலைப்பாடு மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்து விளக்கமளிக்கவுள்ளார்.

மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கைக்கு, குறிப்பிட்ட நாடுகள் பதிலளிப்பதற்காக நாளை (12), நாளை மறுதினம் (13) ஆகிய நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, அரசாங்கத்தின் அண்மைக்கால செயற்பாடுகள், குறிப்பாக போராட்டக்காரர்கள் கைதுசெய்யப்படுகின்றமை, பயங்கரவாத தடைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளமை போன்றவற்றை மையப்படுத்தியும் ஏற்கனவே இலங்கை அரசாங்கம் அமுல்படுத்துவதாக இணங்கியிருந்த 46/1 பிரிவைச் சுட்டிக்காட்டியும் பிரித்தானியா தலைமையில் விசேட பிரேரணை முன்வைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தி ஜெனீவாவுக்குப் பயணமாகியுள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு ஆகியவற்றின் அதிகாரிகள் அங்கு முக்கியஸ்தர்கள் பலரை சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளனர்.

அதன் பிரகாரம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தலைபர் பெட்றிகோ வில்லெகஸ், பிரதி ஆணையாளர் நாடா அல் நாஷிப் ஆகியோரை சந்தித்து தமது நிலைப்பாட்டை விளக்கியுள்ளனர்.

நாட்டில் மனித உரிமைகளை மேம்படுத்துவதில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள், தற்போதைய சவால்கள் குறித்து இதன்போது அரச பிரதிநிதிகளால் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக உள்நாட்டுப் பொறிமுறையை வலுப்படுத்துவதன் அவசியம் குறித்து விளக்கமளித்ததாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு காரணமானவர்கள் குறித்து அறிக்கையிடுவதற்காக நிபுணத்துவ பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும் என ஐ.நா. மனித உரிமை பேரவையிடம் சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிவில் அமைப்பினர், போராட்டக்காரர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளமை, தடுத்து வைக்கப்பட்டுள்ளமை ஆகிய விடயங்கள் குறித்து பேரவையில் விசேட அவதானம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான் மற்றும் காவிந்த ஜயவர்ன ஆகியோரும் ஜெனீவாவுக்குப் பயணமாகியுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரானது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 'பௌத்த நாடு'...

இடையில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்ட தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி., "இன்று இந்நாட்டில் ஏற்பட்டிருப்பது பொருளாதார பிரச்சினை மட்டுமல்ல. அதையும் மீறிய அரசியல், சமூக, பொருளாதார நெருக்கடி ஆகும். இதற்கு மூல காரணம், இந்நாட்டில், இன்னமும் தீராமல் இருக்கும், தேசிய இனப்பிரச்சினை ஆகும். இதற்கு பிரதான காரணம், இந்த நாடு சிங்கள பௌத்த நாடு என்ற நிலைப்பாடு மாறாமல் இருப்பதே ஆகும். பல மொழி, பல இனம், பல கலாசாரம் என்ற கொள்கை முற்று முழுதாக ஏற்கப்படும்வரை உள்நாட்டில் நிலைமாற்றம் ஏற்படாமல் தொடர்கிறது. அதேபோல் வெளிநாட்டு மட்டத்தில், இலங்கை கடலில் இந்திய-சீன முரண்பாடு தீவிரமடைகிறது" என சமந்தா பவரிடம் எடுத்து கூறியுள்ளார்.

கொழும்பு வோட்டர்ஸ் எட்ஜ் விடுதியில் நேற்று நிகழ்ந்த சந்திப்பில், சமந்தா பவரை, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், சஜித் பிரேமதாச, மனோ கணேசன், எம்.ஏ.சுமந்திரன், ரவுப் ஹக்கீம், தயாசிறி ஜயசேகர, ரிசாஷ் பதியுதீன், ஹரிணி அமரசூரிய ஆகியோர் கலந்துகொண்டனர்.

அங்கு மனோ கணேசன் எம்.பி. மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை பன்மை கலாசார நாடக அதிகாரபூர்வமாக உருவாவதற்கு அமெரிக்கா துணை இருக்க வேண்டும். இதன்மூலம் இனப்பிரச்சினை தீரும் வாய்ப்பு ஏற்படும். அது இலங்கை மக்களது நலனுக்கு மட்டுமல்ல, அமெரிக்க, இந்தியா நலன்களுக்கும் வாய்ப்பானது.

இலங்கையில் எல்லா காலத்திலும் மிகவும் நிர்க்கதியான பிரிவினராக தோட்டத் தொழிலாளர்களே வாழ்கின்றனர். வறுமை, போஷாக்கின்மை, சுகாதாரம், கல்வி, சிறுவர் தொழிலாளர், பெண்கள் மீதான அதீத சுமை ஆகியவை தொடர்பான புள்ளி விபரங்கள் தோட்டத் தொழிலாளர் மத்தியிலேயே அதிகமாக இருக்கின்றன. இன்றைய நெருக்கடி நிலைமை அவர்களை மேலும் துன்பத்தில் தள்ளியுள்ளது.

நிர்க்கதியான மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரச நிர்வாக இயந்திரம் பாரபட்சமாக நடக்கிறது. எமக்கு அதன்மீது நம்பிக்கையில்லை. அங்கே அரசியலும், இனவாதமும் இருக்கின்றன. தோட்ட தொழிலாளர்கள் பெரும்பாலும் தமிழர்கள் என்ற காரணத்தால், அவர்களுக்கு உரிய நிவாரணங்கள் கிடைப்பதில்லை.

ஆகவே, அமெரிக்கா உட்பட இலங்கைக்கு உதவிடும் நாடுகள் இதை கவனத்தில் எடுக்க வேண்டும். இலங்கைக்கு வழங்கும் உதவிகளை சிவில் நிறுவனங்கள் மூலம் வழங்குங்கள். அதுவும் கண்காணிக்கப்பட வேண்டும். உதவி பெறும் பிரிவினர் யார் என்பதை சரியாக அடையாளம் காண வேண்டும்.

இலங்கையில் உரம் வாங்கி மக்களுக்கு வழங்க யூஎஸ்எய்ட் நமது நாட்டு அரசுக்கு வழங்கும் 40மில்லியன் அமெரிக்க டொலர் உதவிக்கு நன்றி. ஆனால், இந்த 40மில்லியன் உதவி தொகையில் நமது மக்களுக்கு ஒரு டொலரும் கிடைக்காது. ஏனென்றால், தோட்டத் தொழிலாளர்கள் விவசாய தொழிலாளர்கள் என்றாலும், சொந்த நிலம் இல்லாதவர்கள்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை வாபஸ் பெற சொல்வது நல்லதே. ஆனால், இந்த சட்டத்துக்கு பதில் இன்னொரு சட்டத்தை கொண்டு வந்த பின்னரே அரசாங்கம், பயங்கரவாத தடைச் சட்டத்தை வாபஸ் பெறும். ஆகவே, உடன் தேவை, சட்டத்தை வாபஸ் பெற சொல்வதை விட, சட்டத்தின் அமுலாக்கலை இடை நிறுத்தம் செய்யக் கூறுவதாகும்.

சில வாரங்களாக கைதுசெய்யப்படும், அரகல போராட்டக்காரர்களை விடுதலை செய்ய நாமும் கோருகிறோம். இவர்கள் சில வாரங்களாக கைதுசெய்யப்படுகின்றவர்கள். ஆனால், அதைவிட தமிழ் அரசியல் கைதிகள் நிலைமை படுமோசம். தமிழ் கைதிகள் 5,10,15, 20 வருடங்களாக சிறையில் இருக்கின்றவர்கள். சிலர் தீர்ப்பு வழங்கப்பட்டு தண்டனை அனுபவிக்கிறார்கள்.

இன்னும் சிலர் வழக்குகளை எதிர்நோக்கி உள்ளனர். இன்னமும் சில தொடர்ந்து தடுப்பு காவலில் உள்ளனர். இவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். மீண்டும் வழக்குகள் தொடர கூடாது எனத் தெரிவித்துள்ளார்.

### நாடாளுமன்ற ...



குண்டுத் தாக்குதல் தொடர்பான அறிக்கைகளை மதிப்பாய்வு செய்து, இந்த முழு விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கு இங்கு வருமாறு ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்தின் பின்னால் மறைகரம் இருந்ததா? அப்படியானால், அந்த மறை கரம் யாருடையது? சிலர் அமெரிக்கா என்கிறார்கள். சிலர் இந்தியா என்கிறார்கள். இன்னும் சிலர் சீனா என்கிறார்கள். மற்றவர்கள் பாகிஸ்தான் என்கிறார்கள். அதனால் மறைகரம் எதுவென்று யாருக்கும் தெரியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு மேலும் விடுவிக்கக் கூடிய காணிகள் குறித்து ஆராயப்படுகிறது. காணாமல் போனோர் விவகாரம் குறித்து தீர்வு காண துரிதப்படுத்தப்படும்" - இவ்வாறு ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர், சமந்தா பவர் நேற்று ஊடகவியலாளர்களை சந்தித்தார்.

இதன்போது, உணவு மற்றும் அத்தியாவசிய மருந்துகளுக்காக மேலும் 20 மில்லியன் அமெரிக்க டொலர்களை மனிதாபிமான உதவியாக வழங்கத் தீர்மானித்துள்ளதாக அறிவித்தார்.

### இராஜாங்க அமைச்சர்கள்...

2016 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்கவின் நல்லாட்சி அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், அமைச்சர்களுக்கு வழங்கப்படும் ஒதுக்கீட்டை இந்த இராஜாங்க அமைச்சர்களும் பெற்றுவருவதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த இராஜாங்க அமைச்சர்கள் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொள்ளாதது மாத்திரமே இவர்களுக்கு கிடைக்காத ஒரே சிறப்புரிமையாகும்.

அதன்படி, உத்தியோகபூர்வமாக 03 வாகனங்கள், மேல் மாகாணத்திற்குள் பெற்றோல் வாகனத்திற்கு மாதம் 600 லீற்றர் மற்றும் மேல் மாகாணத்திற்கு வெளியில் இருந்தால் 750 லீற்றர் பெற்றோல், டீசல் வாகனத்திற்கு மேல் மாகாணத்தில் 500 லீற்றரும் வெளியில் 600 லீற்றரும் வழங்கப்படுவதுடன், அத்தகைய 03 வாகனங்களுக்கு 2,250 லீற்றர் பெற்றோலும் வழங்கப்படுகின்றன.

இராஜாங்க அமைச்சர் பெற்றோல் வாகனம் செலுத்தினால் ஒரு லீற்றர் பெற்றோல் 450 ரூபா வீதம் ஒவ்வொரு மாதமும் ஒரு 10 இலட்சத்து 12 ஆயிரத்து 500 ரூபாவாகும். இராஜாங்க அமைச்சர் டீசல் வாகனம் செலுத்தினால், ஒரு லீற்றர் டீசல் 430 ரூபா வீதம் ஒவ்வொரு மாதமும் 7 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாவாகும். இதேவேளை, தொலைபேசி கொடுப்பனவாக, அலுவலகத்திற்கு இரு தொலைபேசியும் வீட்டிற்கு இரு தொலைபேசிகளும் வழங்கப்படுகின்றன.

அலுவலகத்திலுள்ள இரு தொலைபேசிகளுக்கும் 20 ஆயிரம் ரூபா செலுத்தப்படுகின்றன. அரச செயற்பாடுகளுக்காக தொலைபேசிக்கு 10 ஆயிரம் மற்றும் கையடக்க தொலைபேசிக்காக 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுகின்றன.

மேலும், அமைச்சர் அலுவலகத்தில் 15 பேர் கொண்ட அதிகாரிகள் குழு, பிரத்தியேக செயலாளர், இரு ஒருங்கிணைப்புச் செயலாளர்கள், ஊடக செயலாளர், மக்கள் தொடர்பு அதிகாரி, ஐந்து தனியார் உதவி மக்கள் தொடர்பு அதிகாரிகள், இரு அலுவலக உதவியாளர்கள், இரு சாரதிகளும் வழங்கப்படுவர். அவர்களில் 5 பேர் பொதுமக்களின் பணத்தில் பணம் செலுத்தும் தொலைபேசிகளை பயன்படுத்துவதுடன், அவர்களுக்கு 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் ரூபா வரை செலுத்தப்படுகின்றன.

மேலும், பாதுகாப்புக்காக, 08 பொலிஸ் அதிகாரிகள், எரிபொருளுடன் பின்னால் செல்லும் பாதுகாப்பு வாகனமும் இந்த இராஜாங்க அமைச்சர்களுக்கு சிறப்புரிமைகளாக கிடைக்கின்றன என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

### அரிசி, கோதுமைக்கு...

அத்துடன், ஏற்றுமதி செய்யப்படும் ஒவ்வொரு கிலோகிராம் அரிசிக்கும் 20 வீத வரி விதிக்க இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளதால் இலங்கைக்கான அரிசி இறக்குமதியில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை, மொத்த சந்தையில் போதியளவு கோதுமை மா இருப்பதாக வர்த்தக அமைச்சர் தெரிவித்த போதிலும் அடுத்த மூன்று வாரங்களில் கோதுமை மாவிற்கு தட்டுப்பாடு ஏற்படும் எனவும் இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இந்தியாவிலிருந்து கோதுமை மாவை ஏற்றுமதி செய்வதை கட்டுப்படுத்துவதற்கு முடிவெடுத்துள்ளதால், இலங்கைக்கான கோதுமை மாவு இறக்குமதி செய்வதையும் நிறுத்த வேண்டியுள்ளதாக கோதுமை மா இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். மா பற்றாக்குறையால் இதுவரை சுமார் 300 பேக்கரிகள் மூடப்பட்டுள்ளதாகவும் பேக்கரி உரிமையாளர் சங்க தகவல்கள் தெரிவித்தன. எது எவ்வாறாயினும் தற்போது துருக்கி மற்றும் டுபாயிலிருந்து இலங்கைக்கான கோதுமை மாவை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளதாகவும் இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்த நாடுகளில் இருந்து இறக்குமதியாளர்கள் கோரியுள்ள கோதுமை மாவை ஏற்றிவரும் கப்பல்கள் இம்மாதம் 30 திகதியளவில் இலங்கையை வந்தடையும் எனவும் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

### விவசாயிகளுக்கு...

நிர்வாகி சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

இந்த நெருக்கடியான நேரத்தில் அமெரிக்கா இலங்கைக்கு தொடர்ந்தும் தனது ஆதரவை வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு நேற்று முன்தினம் வந்தடைந்த அவர், ஹா - எல பிரதேசத்திற்கு சென்று அங்குள்ள விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் அதே இடத்திலிருந்து காணொளியொன்றை வெளியிட்ட அவர், இலங்கையில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்ததாகவும், எரிபொருள் நெருக்கடி, உரமின்மை காரணமாக விவசாயிகள் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதற்கமைய, இலங்கை விவசாயிகளின் தேவைகளுக்காக அமெரிக்க மக்களிடமிருந்து மேலதிகமாக 40 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்கவுள்ளதாகவும், இதன்மூலம் ஒரு மில்லியன் உள்ளூர் விவசாயிகள் உரம் மற்றும் அவர்களுக்கு அவசியமானவற்றை பெறுவார்கள் எனவும் குறிப்பிட்டார்.

இந்த புதிய நிதியானது, அடுத்த பயிர்ச்செய்கைப் பருவத்தில் விவசாயிகளுக்குத் தேவையான விவசாயத் தேவைகள் மற்றும் உரங்களை உரிய நேரத்தில் பெறுவதற்கும், அவர்களது குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு உதவும் வகையிலும் வழங்க எதிர்பார்க்கப்படுவதாக, சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் நிர்வாகி சமந்தா பவர் தெரிவித்தார்.

# சர்வதேசத்துக்கான அரசின் வாக்குறுதி மீறப்பட்டுள்ளது

## பயங்கரவாத தடைச்சட்டம் குறித்து சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

*யாழ். செய்தியாளர்*



அரசாங்கம் அளித்த வாக்குறுதிக்கு மாறாக மீண்டும் பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தி கைதுகளை ஆரம்பித்து இருப்பதால், நாம் எமது போராட்டத்தையும் ஆரம்பிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது தமிழத் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை இரத்து செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்திவழிப் போராட்டமாக சென்று கையெழுத்து திரட்டும் நடவடிக்கை யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் நேற்றைய தினம் சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட போதே எம்.ஏ.சுமந்திரன் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்த வருடத்தின் பெப்ரவரி மாதம் பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு எதிராக கையெழுத்து போராட்டத்தை நாம் ஆரம்பித்திருந்தோம். இது வடக்கு, கிழக்கு, கொழும்பு, மலையகம் என நாடு முழுவதும் இடம்பெற்றது.

பல்வேறுபட்ட அரசியல் தலைவர்கள் தொழிற்சங்க தலைவர்கள் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் இந்த கையெழுத்து போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

ஆனாலும், கூட நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் பற்றாக்குறை காரணமாக கையெழுத்து போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்த வேண்டி ஏற்பட்டது. வீதியோரங்களில் நாங்கள் இருந்து கையெழுத்துகளை சேகரித்த போது அங்கு நிற்க முடியாத அளவுக்கு வாகனங்கள் எரிபொருளுக்காக காத்திருந்ததால் நாம் கையெழுத்துப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தவில்லை.

நாம் மீண்டும் கையெழுத்து போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு இன்னும் ஒரு காரணம் உண்டு.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது, இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வாக்குறுதியளித்திருந்தார்.

மேலும், பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் வரை அதனை உபயோகிக்க மாட்டோம் என இலங்கை அரசாங்கத்தால் ஐ.நா. மனித உரிமை பேரவைக்கும், சர்வதேச அமைப்புகளுக்கும், நாடாளுமன்றுக்கும் வாக்குறுதி வழங்கப்பட்டது.

ஆனாலும், அந்த வாக்குறுதிக்கு மாறாக அரசாங்கம் மீண்டும் பயங்கரவாத தடை சட்டத்தை பயன்படுத்தி கைதுகளை ஆரம்பித்து இருப்பதால் நாம் எமது போராட்டத்தையும் ஆரம்பிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தை நாட்டின் 25 மாவட்டங்களிலும் முன்னெடுப்போம். விசேடமாக வடக்கு கிழக்கிற்கு வெளியே நாம் இதனை மேற்கொள்ளும்போது மாணவர் அமைப்புகளும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் எம்முடன் இணைந்து செயல்படுவர். உறுதியாக நாம் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தை சென்றடைவோம் என்றார்.

# உளவுத்துறையின் கூலிப்படையா ஈஸ்டர் தாக்குதலை நடத்தியது?




## சந்தேகம் எழுந்துள்ளதாக ஹக்கீம் எம்.பி. தெரிவிப்பு

*யாழ். செய்தியாளர்*

ஈஸ்டர் தாக்குதல் மூலம் இஸ்லாமிய தீவிரவாதம் நாட்டுக்குள் ஊடுருவி விட்டதான மாயையை காட்டுவதற்காக கூலிக்கு அமர்த்தப்பட்ட படையினரை இந்த நாட்டின் உளவுத்துறையே பயன்படுத்தியதா? என்கிற பாரிய சந்தேகம் தற்போது எழுந்துள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்து செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்திவழிப் போராட்டமாக சென்று கையெழுத்து திரட்டும் நடவடிக்கை யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் நேற்று முன் தினம் சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட போதே ரவூப் ஹக்கீம் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் 40 வருடங்களுக்கு மேலாக நீதி, நியாயத்தை எதிர்பார்த்து போராடிய அனைத்து தரப்புகளுமே பயங்கரவாத தடை சட்டத்துக்கு எதிராக குரல் கொடுத்துள்ளனர்.

சர்வதேச நாடுகளும், மனிதநேய அமைப்புகளும் சட்டத்தை நீக்குவதற்கு அழுத்தங்களை கொடுத்த போதும், அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் எதையும் செய்ததாக இல்லை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பாக அழுத்தங்கள் உருவாகியுள்ள நிலையில், உள்நாட்டில் கடந்த இரண்டு மாதங்களாக ஏற்பட்ட போராட்டங்களுக்கு பின்னர் ஒரு சூழல் உருவாகியுள்ளது.

தற்போதுள்ள அரசாங்கம் போராட்டத்தில் ஈடுபட்டவர்களையும் போராட்டத்திற்கு தலைமை தாங்கியவர்களையும் அடக்குவதற்காக பயங்கரவாத தடைச்சட்டத்தை பாவிக்கின்ற நிலைமை உருவாகி உள்ளது. இது அவசரமாக தடுக்கப்பட வேண்டிய விடயமாகும். ஒவ்வொரு கட்டத்திலும் பயங்கரவாத தடைச் சட்டம் இல்லாமல் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது என்கிற போலியான கருத்து உருவாக்கப்பட்டு வருகிறது.

அண்மையில் நடந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை நியாயப்படுத்துவதற்கும் பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துகின்றனர். இஸ்லாமிய தீவிரவாதம் நாட்டுக்குள் ஊடுருவி விட்டதான மாயையை காட்டுவதற்காக கூலிக்கு அமர்த்தப்பட்ட படையினரை இந்த நாட்டின் உளவுத்துறையே பயன்படுத்தியதா என்கிற பாரிய சந்தேகம் தற்போது எழுந்துள்ளது.

இவ்வாறான சந்தேகங்களுக்கு தீர்வு கிடைக்காத நிலையில், இதற்காக அப்பாவி இளைஞர்கள் தண்டிக்கப்படுவதற்கும், நிரபராதிகள் கொல்லப்படுவதற்கும் இந்த சட்டம் வழிகோலுகிறது.

திடீர் மரண விசாரணை இல்லாமல் சடலங்களை கொண்டு சென்று புதைக்கலாம் என்கிற விடயத்தை கூட அவசர காலச் சட்டத்தில் அதற்குரிய ஏற்பாடுகளை புகுத்தி கடந்த காலங்களில் செய்தனர்.

தற்போது எழுந்துள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் மக்கள் எழுச்சியை அடக்குவதற்காக பயங்கரவாத தடைச் சட்டத்தை பாவிக்கின்ற நிலைமை காணப்படுகிறது.

அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒன்றிணைந்து செயல்படும்போது

மிக விரைவில் இந்த கொடிய சட்டத்தை நாட்டின் சட்ட புத்தகத்திலிருந்து அகற்றுவதற்கு வாய்ப்பு கிட்டும் - என்றார்.

### பயங்கரவாதத்...

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்து செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்திவழிப் போராட்டமாக சென்று கையெழுத்து திரட்டும் நடவடிக்கை யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட போதே தர்மலிங்கம் சித்தார்த்தன் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் அரசியல் கைதிகள் எவ்வித காரணங்களுமின்றி நீண்ட காலமாக சிறைகளில் வாடிக் கொண்டிருக்கின்றார்கள். பயங்கரவாத தடை சட்டத்தில் திருத்தங்கள் செய்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. அந்தச் சட்டமே முழுமையாக நீக்கப்பட வேண்டும். நாடு முழுவதும் உள்ள மக்களின் ஆதரவுடன் செல்லும்போது இந்தச் சட்டத்தை நீக்குவதற்கு வலு காணப்படும். கையெழுத்து திரட்டும் இந்த நடவடிக்கையில் இன மத பேதமின்றி அரசியல் கட்சி பிரதிநிதிகள், தொழிற்சங்க தலைவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டுள்ளோம். இந்த பயங்கரவாத தடை சட்டத்தை நீக்க வேண்டும். இல்லாவிடில் அது நீக்கப்படும் வரை நாம் தொடர்ந்து போராட வேண்டும் என்றார்.

## சர்வமதத் தலைவர்கள் அநுராதபுரம் மறைமாவட்டத்துக்கு அனுபவப்பகிர்வு களப்பயணம்





(உடப்பு செய்தியாளர்)

சிலாபம் செடெக் நிறுவனத்தின் சர்வசமய சகவாழ்வு செயற்றிட்டத்தின் ஊடாக சர்வமதத் தலைவர்கள் அநுராதபுரம் மறைமாவட்டத்திற்கு அனுபவப்பகிர்வு களப்பயணமொன்றை தேசிய செடெக் நிறுவனப் பணிப்பாளர் லூக் நெல்சன் தலைமையில் அண்மையில் மேற்கொண்டிருந்தனர்.

அவ்விரு தினங்களிலும் அநுராதபுரம் ஜயஸ்ரீமா போதி மற்றும் ருவன்வெலிசாய போன்ற சமயத் தலங்களை தரிசித்ததோடு அநுராதபுரம் இந்து ஆலயம், அநுராதபுரம் தேவாலயம் மற்றும் பள்ளிவாசல் என்பவற்றிற்கும் விஜயம் மேற்கொண்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அநுராதபுர மறைஆயர் நோபட் அன்ராதியுடன் சர்வமத சகவாழ்வினை வலுப்படுத்தல் மற்றும் அந்தப் பிரதேச மக்களின் வாழ்க்கை நிலை, எரிபொருள் பொருளாதார பிரச்சினை மூலமாக மக்கள் எதிர்நோக்கும் சவால்கள் பற்றியும் இவற்றுக்கான தீர்வினை நாம் எவ்வாறு மேல் மட்டத்திற்கு அறிவுறுத்துவது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

அவ்வாறே சமூக, பொருளாதாரப் பிரச்சினைக்கு மத்தியில் சமயத் தலைவர்களுக்கு உள்ள பொறுப்புகள் பற்றிய கலந்துரையாடலோடு கடந்த வியாழக்கிழமை கூடிய அறிவூட்டல் அமர்வும் நடைபெற்றது. இப்பயணத்திற்கு பாலசோலை, சிலாபம், மானுவன்கம விகாரைகளின் சங்கைக்குரிய பௌத்தமத குருமார்கள், சிலாபம் மறைமாவட்டத்தின் பங்குத் தந்தையர்கள், கொத்தாந்தீவு பள்ளிவாசலின் மதிப்பிற்குரிய மௌலவி, கஜுவத்தை முஸ்லிம் பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் சிலாபம் செடெக் நிறுவன அதிகாரிகள் உட்பட அநுராதபுரம் செடெக் நிறுவன இயக்குனர் னட் சாந்த அடிகள் உட்பட நிறுவன அதிகாரிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## பிரபல ஓவியர் தவம் மறைவு



பிரபல ஓவியரும் அச்சுத் துறை நிபுணருமான தவம் (வீ.சுப்பிரமணியம் சிறிது கால சுகவீனத்துக்குப் பிறகு கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் தனது 74ஆவது வயதில் காலமானார்.

வடமராட்சி கரவெட்டியைச் சேர்ந்த தவம் 1960களில் தொடங்கி பத்திரிகைத்துறை ஓவியராக பணியாற்றத் தொடங்கிய தமிழ் ஓவியர்கள் வரிசையில் முக்கியமான ஒருவர். கொழும்பில் கே.ஜி.இண்டஸ்ட்ரீஸ், சினிமாஸ் தியேட்டர்ஸ் நிறுவனங்களில் பணியாற்றுவதற்கு முன்னர் வீரகேசரி ஆசிரியபீட ஓவியர்களில் ஒருவராக இருந்தவர். இளவயதில் இந்தியா சென்று ஓவியக்கலையின் நுட்பங்களைப் பயின்றவர்.

நவீன அச்சுத்துறையில் ஆர்வம்கொண்ட அவர் கொழும்பில் லக்சு கிரபிக்ஸ் என்ற அச்சு நிறுவனத்தையும் நிறுவியவர்.

கரவெட்டியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தவத்தின் இறுதிக்கிரியைகளில் சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த மக்கள் பெருமளவில் கலந்துகொண்டு அவருக்கு அஞ்சலி செலுத்தினர். அவரின் மறைவு தமிழ்ச்சமூகத்தின் மத்தியில் ஓவியத்துறைக்கு பெரும் இழப்பு என்று இறுதி நிகழ்வில் அஞ்சலி உரை நிகழ்த்திய பலரும் தெரிவித்தனர். சுகவீனமுற்றிருந்த நிலையிலும் இறுதி நாட்களிலும் அவர் ஓவியங்கள் வரைவதைக் கைவிடவில்லை.

## கிராமப்புற பொருளாதார மறுமலர்ச்சிக்கான பிரிவை விரைவாக ஆரம்பிக்கவென தேசிய திட்டம்

### நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவிப்பு



நாட்டின் செல்வத்தை வீணடிக்காமல், கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து சகல தரப்பினரினதும் ஒத்துழைப்புடன் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்குத் தேவையான தேசிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சரும் பிரதமருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாட்டின் செல்வத்தை தேச நலனுக்காகவும், மக்களின் நல்வாழ்வுக்காகவும் பயன்படுத்துவதே அரச அதிகாரிகளின் பொறுப்பென்றும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச பிரிவு மாத்திரமல்ல, தனியார், கூட்டுறவு பிரிவு உள்ளிட்ட கிராம மட்டத்திலுள்ள சகல பிரிவுகளும் உள்ளடங்கலாக அரசியல் வகுப்பினரின் பங்களிப்புடன் இந்த தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும் பிரதமர் கோரியுள்ளார்.

கிராம உத்தியோகத்தர்கள் பிரிவு, கிராம பொருளாதார மறுசீரமைப்பு என்பவற்றை துறைகளின் அடிப்படையில் விரைவாக ஊக்குவிப்பதற்கான தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக ஆளுநர்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு விழிப்புணர்வூட்டும் வகையிலான கலந்துரையாடல் அண்மையில் நாரஹேன்பிட்டியிலுள்ள உள்விவகார அமைச்சில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரதமரின் வேலைத்திட்டத்துக்கமைய அரச நிர்வாக, உள்விவகாரம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சர் என்ற அடிப்படையில் முன்வைக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவில், "கிராம பொருளாதார மறுசீரமைப்புத்துறை" என்ற அடிப்படையில் விரைவாக ஊக்குவிப்பதற்கான தேசிய வேலைத்திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அதற்கான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின்போது கிராம பொருளாதார மறுசீரமைப்புத்துறையை இரண்டு வாரங்களில் ஸ்தாபிப்பதற்கு ஆளுநர்கள், அரச நிர்வாகம் மற்றும் உள்விவகார செயற்பாடுகள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சின் செயலாளருக்கு உறுதி வழங்கியுள்ளனர். அதற்கமைய, எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் இந்தக் குழுவை நியமிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் உணவு பாதுகாப்பு தொடர்பில் தெரிவுசெய்யப்படும் குழு உள்ளிட்ட பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் பொருளாதார மறுசீரமைப்புக் குழு நியமிக்கப்படவுள்ளது. இந்தக் குழுக்கள் தேசிய குழு மூலம் நிர்வகிக்கப்படும்.

இது தொடர்பாக பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்னே விடுத்துள்ள சுற்றறிக்கையில் இரண்டு உள்ளூர் மக்கள் பிரதிநிதிகள் இந்த "கிராமிய பொருளாதார மறுமலர்ச்சி பிரிவுகளுக்கு" ஆதரவாளர்களாக ஆதரவளிப்பார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதாரச் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள தனியார்துறை, கூட்டுறவு, மீன்பிடி, கால்நடைத் தொழில், சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவைகள், அரசு சாரா துறைகள் போன்ற செயலில் உள்ள பங்குதாரர்களுடன் முன்னேற்ற மதிப்பாய்வு செயல்முறை தொடரவேண்டும் என்று அது கூறுகிறது.

இது ஜனாதிபதியின் தலைமையில் நிறுவப்பட்ட தேசிய உணவுப் பாதுகாப்புக் குழுவின் இலக்குகளை அடையவும் எதிர்பார்க்கப்படுகிறது. உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக, நாட்டில் உணவு உற்பத்தியின் அளவை இரட்டிப்பாக்குதல் மற்றும் கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்குதல் ஆகியவற்றின் முக்கிய நோக்கங்களை அடைவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. மிகவும் ஏழ்மையான குடும்பங்கள் பொருளாதார செயல்முறைக்கு இடமாற்றம் செய்யப்படும் வரை போதுமான மானியங்கள் வழங்கப்படும் மற்றும் போக்குவரத்து அமைப்புகளை நவீனமயமாக்குவதன் மூலம் அறுவடைக்குப் பிந்தைய சேதத்தை குறைப்பது உட்பட அனைத்து தயாரிப்புகளையும் அதிக உற்பத்தித்திறனுக்கு கொண்டுவரும் திட்டம் செயல்படுத்தப்படும்.

இந்த தேசிய திட்டத்தின் கீழ் அனைத்து குடும்பங்களின் விவசாய, சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்கள் மற்றும் சுகாதார நிலை, வறுமை ஒழிப்பு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாடு போன்றவற்றை இ-டேட்டா அமைப்பின் மூலம் தொடர்ந்து கண்காணிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

"கிராம சேவையாளர் வாசம், கிராமிய பொருளாதார மறுமலர்ச்சிக்கான மத்திய நிலையமாக விரைவான வலுவூட்டலுக்கான தேசிய வேலைத்திட்டம்" ஆரம்பிப்பதற்கான முதல் கலந்துரையாடலில் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, பிரதமரின் ஆலோசகர் கலாநிதி சுரேன் படகொட, பொது நிர்வாக அமைச்சு, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி செயலர் எம்.ம.பொ.க. மாயாதுன்னே, கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.ரத்நாயக்க, விவசாய அமைச்சின் செயலாளர் எம்.பி.ஆர். புஷ்பகுமாராயண, கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்ட அரசாங்க அதிபர்கள் மற்றும் அரச உயர் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர். மற்ற அனைத்து மாவட்ட செயலாளர்களும் ஜூம் தொழில்நுட்பம் மூலம் இதில் இணைந்தனர்.

## இரத்தினக்கல் - தங்க ஆபரணங்களை இணையவழி மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை

மூவாயிரம் டொலர்கள் பெறுமதியான இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்களை இணையவழி மூலம் சர்வதேச சந்தைக்கு விற்பனைக்காக சமர்ப்பிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் 300 அமெரிக்க டொலர்களாக இத்தொகை வரையறுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொழும்புக்கு வருகை தராமல் பிரதான தபால் நிலையங்கள் ஊடாக சுங்கப் பிரிவின் தேவையை நிறைவு செய்த பின்னர் தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண இணையத்தளத்திற்கு பிரவேசித்து தமது தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதற்கு வர்த்தகர்களுக்கு முடியும்.


திருமண தேடல் விளம்பரங்களை **இலவசமாக** பிரசுரித்துக்கொள்ள அரிய வாய்ப்பு!




" உங்களுடைய அன்பான மகன் / மகளின் திருமணத்துக்கு பொருத்தமான துணையை தேடுகிறீர்களா? அவ்வாறாயின் அதற்கான வாய்ப்பை நாம் உங்களுக்குத் தருகிறோம். "

தமிழன் ஞாயிறு வார இதழில் வெளியாகும் விளம்பர பக்கத்தில் உங்களுடைய மகன் / மகளுடைய விபரங்களையும் எப்படியான துணையை தேடுகிறீர்கள் என்ற விடயத்தையும் தெளிவாக குறிப்பிட்டு (30 சொற்களுக்குக் குறைவாக) 23CM X 10CM அளவுள்ள கடித உறையில் உங்களுடைய விலாசத்தை குறிப்பிட்டு கீழே உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள். இவற்றுக்கு எதுவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.

**உங்களுக்கு கிடைக்கும் சகல கடிதங்களையும் மூன்று வாரங்களுக்கு ஒருமுறை உங்களுடைய முகவரிக்கு நாம் அனுப்பி வைப்போம்.**

மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்க : சுசி - 0115 886187

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி இல : 0115 200 900, தொலைநகல் : 0112 673 442
வட்ஸ்அப் : 076 139 3805

விவாஹா திருமண சேவை
தபால் பெட்டி இலக்கம் 2310,
கொழும்பு.

thamilaneditor@gmail.com

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2022, செப்டெம்பர் 12ஆம் திகதி, திங்கட்கிழமை**

# மனித உரிமைகள் பேரவையின் புதிய ஆணையர் கவனத்திற்கு

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் 51 ஆவது கூட்டத்தொடர் இன்று ஜெனிவாவில் புதிய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்க்கர் டர்க்கின் வழிகாட்டலில் ஆரம்பமாகின்றது.

கடந்த 2018 செப்டெம்பர் முதலாம் திகதி தொடக்கம் கடந்த மாதம் 31ஆம் திகதி வரை மூன்று ஆண்டுகள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராகப் பணியாற்றிய மிச்செல் பச்லே அம்மையாரின் பதவிக்காலம் முடிவடைந்தமையை அடுத்து, ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்தவரான வோல்க்கர் டர்க்கை புதிய ஆணையாளராக ஐ.நா. பொதுச் சபை அங்கீகரித்தது.

இந்தப் பதவியை அலங்கரிக்கும் எட்டாவது ஆணையாளர் இவர். இதுவரை காலமும் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிறைவேற்று அலுவலகத்தில் கொள்கை வகுப்புக்கான கீழ்நிலைச் செயலாளராக இருந்தவர் வோல்க்கர் டர்க்.

வியன்னா பல்கலைக்கழகத்தில் சர்வதேச சட்டங்களில் கலாநிதிப் பட்டம் பெற்ற அவர் ஒஸ்ட்ரிய லின்ஸ் பல்கலைக்கழகத்தில் சட்ட முதுமாணி பட்டத்தைச் சுவீகரித்தவர். ஆங்கிலம் மற்றும் பிரெஞ்ச் மொழிகளில் நன்கு தேர்ச்சி பெற்ற டர்க், ஸ்பானிய மொழியிலும் சரளமாகப் பணியாற்றக் கூடியவர்.

ஐ.நா. அகதிகள் தூதரகத்தின் உதவி ஆணையாளர் பதவி உட்பட ஐ.நா. கட்டமைப்பில் பல உயர்ந்த பதவிகளை நீண்ட காலம் கையாண்ட அனுபவம் பெற்றவர். இப்போதைய புதிய பதவியில் தமக்கு முந்திய ஆணையாளர்களை விடவும் மிகவும் வலிமையாகவும், உறுதியாகவும், திறமையாகவும் பணியாற்றுவார் என எதிர்பார்க்கப்படுபவர்.

பதவியை விட்டு விலகிச் செல்லும் மிச்செல் பச்லே அம்மையார், தமது பணி ஓய்வுக்கு முன்னர் சர்வதேச மனித உரிமைகள் விடயத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்குக் காத்திரமாகப் பங்காற்றியிருக்கின்றார் என்று அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பலத்த சர்ச்சைகள், எதிர்ப்புகளுக்கு மத்தியில் சீனாவுக்கு விஜயம் செய்திருந்த அவர், அங்கிருந்து திரும்பிய பின்னர் நீண்ட காலம் அது பற்றிய தமது அவதானிப்பு அறிக்கையை வெளியிடாமல் இருந்தார். கடந்த மாதமே அதை வெளியிட்டார். அந்த அறிக்கை சீன அரசின் போக்கைத் தோலுரித்துக் காட்டியது. அதன் மோசமான மனித உரிமை மீறல்களைப் பகிரங்கமாக அம்பலப்படுத்தியது.

அதே போன்றுதான் கடைசியாக இலங்கை தொடர்பான தனது அறிக்கையையும் பச்லே அம்மையார் கனம் காத்திரமாக முன் வைத்திருக்கிறார். அவரது மூன்றாண்டு அரும்பணிக்கும், மனித உரிமைகள் ஆணையாளர் சேவைக்கும் சிகரம் போன்று முத்தாய்ப்பு வைப்பதாக அந்த அறிக்கை அமைந்துள்ளது என மனித உரிமைகள் ஆர்வலர்கள் எல்லோரும் மெச்சுகின்றனர்.

தொடர்ந்து அந்தப் பதவியை ஏற்றிருக்கும் வோல்க்கர் டர்க் இந்த விடயத்தில், இலங்கை விவகாரத்தில் மனித உரிமைகள், நீதி, நியாயம், பொறுப்புக் கூறல் போன்றவற்றை நிலை நாட்டுவதற்கு அம்மையாரின் இந்தப் பிந்திய அறிக்கை அவரை வழிப்படுத்தும் என நம்பலாம். ஆனாலும், உள்நாட்டுப்போர் முடிவடைந்து இத்தனை ஆண்டுகள் கழித்தும் இலங்கையில் மனித உரிமைகள் நிலைநாட்டப்படுவதில் ஜெனிவா தோல்வி கண்டுள்ளதென்பதை குறிப்பிட்டாக வேண்டும்.

சில மாதங்களுக்கு முன்னர் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக நடந்த மக்களின் எதிர்ப்புச் செயற்பாடு உலகம் அறிந்தது. அந்த செயற்பாட்டை ஒத்த அல்லது அதைவிடத் தீவிரமான எதிர்ப்புச் செயற்பாடுகளையே தமது உரிமைகளுக்காக இந்த தேசத்தில் தமிழர்கள் பல தசாப்தங்களாக மேற்கொண்டு வந்தனர். ஆனால், தமிழர்கள் என்ன சொல்ல வருகின்றனர் என்பதை அறிந்தும் அது தெரியாததுபோல் நடித்த ஆட்சியாளர்கள் இன்று அதேவிதமான அடக்குமுறையை சிங்கள மக்கள் மீதும் பிரயோகிக்க ஆரம்பித்துள்ளனர். மனித உரிமைகளைப் பேணி நடவுங்கள் என்று இலங்கைக்கு கூறுவது செவிடன் காதில் சங்கு ஊதுவதற்கு ஒப்பானதாகும்.

ஐ.நா. மனித உரிமைகள் புதிய ஆணையாளர் அனுபவமிக்க ஒருவர் என்பதால் மனித உரிமைகள் விடயத்தில் சற்று இறுக்கமான போக்கை கடைப்பிடிப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை விடயத்திலும் அவர் காத்திரமான போக்கை கடைப்பிடிக்க வேண்டும்.




# விரும்பாமல் கிடைத்த பதவி: ஜனநாயக யுகத்தில் முடியாட்சி

## பிரிட்டன் மகாராணி கண்ட விமர்சனங்கள்

**தி.முருகன்**

அரபு நாடுகள் தவிர்த்து உலகெங்கிலும் மன்னராட்சி முறை ஒழிக்கப்பட்டுவிட்ட நவீன யுகத்தில் 70 ஆண்டுகள் ஒரு தேசத்தின் மகாராணியாகப் பதவி வகிப்பது சாதாரண விடயம் இல்லை. பிரிட்டிஷ் மகாராணி இரண்டாம் எலிசபெத் அந்தச் சாதனையைச் செய்து மறைந்திருக்கிறார்.

சூரியன் அஸ்தமிக்காத பேரரசு என்ற பெருமையுடன் உலகின் பல நாடுகளை ஆக்கிரமித்து ஆட்சி செய்த பிரிட்டிஷ் பேரரசின் பொற்காலத்தில் அவர் பதவி ஏற்கவில்லை. இந்தியா உள்ளிட்ட எல்லா காலனி ஆதிக்க நாடுகளும் சுதந்திரம் அடைந்து, பிரிட்டிஷ் அரசின் அதிகாரம் அதன் தீவுகளுக்குள் சுருங்கிய காலத்தின் மகாராணி அவர். எவ்வளவு பெரிய பிரபலத்தையும் விமர்சனங்களால் அடித்துத் துவைக்கும் இந்த சமூகவலைத்தளங்களின் யுகத்திலும் எந்த சர்ச்சைகளிலும் சிக்காமல் வாழ்ந்தவர் அவர். அதனால்தான் பிரிட்டிஷ் மக்கள் மட்டுமின்றி, உலகெங்கிலும் வாழும் மக்கள் அவருக்கு அஞ்சலி செலுத்துகிறார்கள்.

அவர் ஆட்சியில் அமர்ந்த 1952ஆம் ஆண்டில்தான் எவரெஸ்ட் சிகரத்தை முதன்முதலில் மனிதர்கள் தொட்டார்கள். நிலவைத் தொடுவது என்பது அப்போதுவரை கனவாகவே இருந்தது. கணினி, கைபேசி, ஜி.பி.எஸ். என எதுவுமே இல்லாத காலத்தின் மகாராணி அவர். பல போர்களைப் பார்த்தார். தன் கண்ணெதிரே சோவியத் யூனியன் நொறுங்கி வீழ்ந்ததைப் பார்த்தார். அவர் காலத்தில் பிரிட்டனில் 15 பிரதமர்கள் மாறிவிட்டார்கள். அமெரிக்காவில் 14 ஜனாதிபதிகள் மாறிவிட்டார்கள். இந்தியாவில் நேரு தொடங்கி மோடி வரை 14 பிரதமர்கள் மாறிவிட்டார்கள். மாறாத மகாராணியாக அவர் தொடர்ந்து பதவி வகித்தார்.

உலகின் மிகப் பணக்கார அரச வம்சங்களில் ஒன்று பிரிட்டிஷ் ராஜவம்சம். பக்கிங்ஹாம் அரண்மனை உட்பட முப்பதுக்கும் மேற்பட்ட அரண்மனைகள் மற்றும் கோட்டைகள், பல்லாயிரம் ஏக்கர் எஸ்டேட் என சுமார் மூன்று இலட்சம் கோடி ரூபா சொத்துகள் கொண்ட குடும்பம். ஆனால், மகாராணி பதவியை விருப்பமே இல்லாமல்தான் எலிசபெத் ஏற்றுக்கொண்டார்.

பிரிட்டன் மன்னராக இருந்த எலிசபெத்தின் பெரியப்பா



ஏழாம் எட்வர்ட் ஒரு அமெரிக்கப் பெண்ணைக் காதலித்தார். அவரைத் திருமணம் செய்துகொள்வதற்காக தன் மகுடத்தைத் துறந்தார். அதனால் எலிசபெத்தின் அப்பா ஆறாம் ஜோர்ஜ் அடுத்த மன்னராகப் பதவி ஏற்றார். பிரிட்டிஷ் அரச மரபு விதிமுறைகளின்படி, ஒரு மன்னருக்கு மகன்கள் இல்லையென்றால், அவரின் மூத்த மகளே அடுத்த மகாராணியாகப் பதவி ஏற்க வேண்டும். அதனால், 12 வயதில் இளவரசி ஆனார் எலிசபெத்.

அரச குடும்ப வாழ்க்கை அவருக்கு அச்சம் தந்தது. பள்ளிக்குப் போக முடியாது. பல ஆசிரியர்கள் அரண்மனைக்கே வந்து பாடம் நடத்துவார்கள். வரலாறு, அறிவியல், இலக்கியம், பிரெஞ்சு உள்ளிட்ட மொழிகள் என எல்லாவற்றுடன் சமயக் கல்வியும் உண்டு. குதிரையேற்றம், நீச்சல், நடனம், கலைகள் என்று எல்லாவற்றையும் கற்றுக்கொள்ள வேண்டும்.

பொம்மைக்குதிரைகளை வைத்துக்கொண்டு தோழிகள் துணையின்றி ஏக்கமாக விளையாடிய வயதில், இந்தப் பயிற்சிகள் அவருக்கு வெறுப்பு ஏற்படுத்தின. "எனக்கு ஒரு தம்பி பிறந்தால், நான் மகாராணி ஆகாமல் தப்பித்துவிடுவேன். ஒரு தம்பியைக் கொடு இறைவா" என்று தினம் தினம் வேண்டுவாராம் எலிசபெத். ஆனால், அந்த வேண்டுதல் பலிக்கவில்லை. 1952ஆம் ஆண்டு தந்தை இறக்க, 25 வயதில் அரியணை ஏறினார் எலிசபெத்.

பிரிட்டிஷ் மகாராணி என்பவர் பிரிட்டனுக்கு மட்டும் அரசி இல்லை. அவுஸ்திரேலியா, கனடா உள்ளிட்ட 14 நாடுகளுக்கும் மகாராணி. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் முன்பு இருந்த இந்தியா உள்ளிட்ட 54 நாடுகளை உறுப்பினராகக் கொண்ட பொதுநலவாய நாடுகள் கூட்டமைப்பின் தலைவரும் அவர்தான். இத்தனை பொறுப்புகள்



இருந்தாலும், எல்லாமே அலங்காரப் பதவிகள்தான்.

பிரிட்டிஷ் மக்களுக்கு அவர் பெயரில்தான் கடவுச்சீட்டு வழங்கப்படும். தபால் தலைகள், ரூபா நோட்டுகள், நாணயங்களில் அவர் உருவம்தான் இருக்கும். இராணுவம் அவர் பெயரில்தான் இயங்கும். கிட்டத்தட்ட 500 சேவை நிறுவனங்களுக்கு அவர் தலைமைப்பதவி வகித்தார்.

அரசின் எல்லா முடிவுகளும் அவர் ஒப்புதல் தந்தால்தான் சட்டமாகும். ஒரு சிவப்புப்பெட்டியில் அரசாங்க ஆவணங்கள் அவரின் முத்திரை ஒப்புதலுக்காக வருவது ஒரு சம்பிரதாய சடங்கு போல நிகழும். பிரிட்டிஷ் பிரதமருக்கு அவரே பதவிப் பிரமாணம் செய்துவைப்பார். கடந்த வாரம் தேர்வான லிஸ் டிரஸ், அவரால் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்ட கடைசி பிரிட்டிஷ் பிரதமர். வாரம் ஒருமுறை பிரதமர் வந்து மகாராணியை சந்திப்பது மரபு. அரசின் முடிவுகளை அப்போது மகாராணி பாராட்டவோ, கண்டிக்கவோ செய்வார்.

என்றாலும், எந்தத் தருணத்திலும் அரசின் முடிவுகளை அவர் வெளிப்படையாகக் கண்டித்தது இல்லை. சர்ச்சில், மார்கிரெட் தாட்சர் போன்ற வலிமையான பிரதமர்கள் தங்கள் ஆட்சிக்காலத்தில் அரண்மனையுடன் மோதியது உண்டு. அப்போதும் மகாராணி எதுவும் சொன்னதில்லை. ஆளும் கட்சிகள் மாறினாலும், எல்லோரிடமும் அவர் ஒரே இயல்புடனே நடந்துகொண்டார். அந்த அரசியல் நடுநிலை ஆச்சரியமாக இருக்கும். தன் வாழ்நாளில் ஒரே ஒருமுறைகூட அவர் பேட்டி கொடுத்ததில்லை. "என் காலத்தை அடுத்தவர்கள்தான் மதிப்பிட வேண்டும். நானே மதிப்பிடுவது நன்றாக இருக்காது" என்று மட்டும் ஒருமுறை சொன்னார்.

மன்னர் குடும்பம் என்பது மக்களிடமிருந்து விலகி தனியாக இருந்த காலம் ஒன்று உண்டு. ஆனால், "நாம் வாக்களித்து பிரதமரைத் தேர்வு செய்யும் ஜனநாயக காலத்தில் இருக்கிறோம். இன்னும் எதற்கு அரச பரம்பரை?" என்று கேட்பவர்கள் அதிகரித்துவிட்ட காலத்தின் மகாராணியாக இருந்தார் எலிசபெத். அதை அவர்



உணர்ந்தும் இருந்தார்.

1992ஆம் ஆண்டு அரச குடும்பத்தில் வின்ட்ஸர் கோட்டை தீ விபத்தில் சேதமடைந்தது. அதை அரசு செலவில் சரிசெய்தாக வேண்டும். ஆனால், மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு எழுந்தது. "அரச குடும்பம் வரியே கட்டுவதில்லை. ஆனால், எங்கள் வரிப்பணத்தில் அவர்கள் கோட்டையைச் சீரமைக்க வேண்டுமா?" என்று பலர் கோபமாகக் கேட்டார்கள். அந்தக் கேள்வியில் இருந்த கோபத்தைப் புரிந்துகொண்டார் எலிசபெத். "மகாராணி என்பதற்காக எனக்கு சலுகை தேவையில்லை. என் தனிப்பட்ட வருமானத்துக்கு வரி கட்டுவேன்" என அறிவித்தார். கோட்டையை சீரமைக்கும் செலவில் முக்கால்வாசியை அரச குடும்பம் ஏற்றது.

ஒவ்வோர் ஆண்டும் கிறிஸ்மஸ் நேரத்தில் நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்துவார் மகாராணி. அதை எலிசபெத் தானே கைப்பட எழுதுவார். அந்த ஆண்டு பேசும்போது, "மன்னர் குடும்பம் உட்பட யாருமே விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. எங்கள் மீது விசுவாசம் காட்டுபவர்கள், எதிர்ப்பவர்கள் என்று எல்லோருக்கும் அந்த உரிமை உண்டு" என்றார் மகாராணி.

மிக நீண்ட ஆயுள் ஒரு வகையில் வரம். ஆனால், வாழ்க்கைத் துயரங்களையும் அது அதிகமாகக் கொடுத்துவிடும். தன் காதல் கணவர் பிலிப்புடன் 74 ஆண்டுகள் இணைந்து வாழ்ந்தார் அவர். ஆனால், அவர் குடும்பத்தில் பலருக்கு அந்தக் கொடுப்பினை இல்லை. மூத்த மகன் சார்ள்ஸ் தன் மனைவி டயானாவை விவாகரத்து செய்தார். மக்கள் நேசித்த இளவரசியாக இருந்த டயானா அரச குடும்பத்திலிருந்து வெளியேறியபோது தேசமே மன்னர் குடும்பத்தைத் தூற்றியது. ஒரு கார் விபத்தில் டயானா இறந்தபோது, மன்னர் குடும்பம் மீண்டும் சாபத்துக்கு ஆளானது. சார்ள்ஸ் பிறகு தன் காதலி கமீலாவைத் திருமணம் செய்துகொண்டார். மகாராணி எலிசபெத்தின் இன்னொரு மகன் எண்ட்ருவும் தன் மனைவியை விவாகரத்து செய்தார். மகள் ஏன்னும் மணமுறிவுக்கு ஆளானார்.

சார்ள்ஸின் குடும்பமும் சர்ச்சைகளுக்குத் தப்பவில்லை. சார்ள்ஸ் - டயானா தம்பதியின் இரண்டாவது மகன் இளவரசர் ஹெரி, அமெரிக்க நடிகையான மேகன் மார்கலைக் காதலித்து திருமணம் செய்துகொண்டார். அவரை நிறவெறியுடன் அரச குடும்பம் நடத்தியதாகக் குற்றம் சாட்டி, தன் இளவரசர் பட்டத்தையே துறந்து அரண்மனையிலிருந்து வெளியேறினார் அவர்.

குடும்பத் துயரங்கள் அனைத்திலும் தனக்கு ஆறுதலாக இருந்த கணவர் பிலிப் கடந்த ஆண்டு இறந்தபோது எலிசபெத் மகாராணி நொறுங்கிப் போனார். கொரோனா காரணமாக அவரது இறுதிச்சடங்குகளும் எளிமையாகவே நடைபெற்றன.

தனிப்பட்ட வாழ்வில் சோகங்கள் இருந்தாலும், பொது நிகழ்ச்சிகளில் மகாராணி சிரித்தபடியே இருக்க வேண்டும் என்பது மரபு. வெளிநாட்டுப் பயணங்களில் பல மணிநேரம் சிரித்தபடியே இருந்து, வாய் சுளுக்கிக்கொண்டு அவர் அவதிப்பட்டதுண்டு. அதே நேரம், அபார நகைச்சுவை உணர்வும் அவருக்கு இருந்தது. பிரமாதமாக மிமிக்ரி செய்வார். ஒரு கொன்கோர்ட் விமானம் இறங்கும் ஓசையை அவர் மிமிக்ரி செய்து காட்டி பிரமிக்க வைத்திருக்கிறார். தன்னை அடிக்கடி சந்திக்கும் பலரிடம், அவர்கள் போலவே பேசிக் காட்டி மிரட்டியிருக்கிறார்.

'ஆண்டின் சிறந்த முதியவர்' என்ற பெருமைக்குரிய விருதை கடந்த ஆண்டு அவருக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 95 வயதில் இதை வாங்குவது பலருக்கும் இயல்பு. ஆனால், "நாம் மனதளவில் என்ன வயது என நினைக்கிறோமோ, அந்த வயதில்தான் இருக்கிறோம். மகாராணி இந்த விருதைப் பெறும் அளவுக்கு முதியவராகத் தன்னை உணரவில்லை. எனவே, தகுதியுள்ள வேறு யாருக்காவது விருதைக் கொடுத்துவிடவும்" என்று பதில் அனுப்பியது அரண்மனை. அந்த மனநிலைதான் அவரை 96 வயது வரை வாழ வைத்திருக்கிறது.



***நன்றி - விகடன்***

## நக்கல் நமசிவாயம்

**அரசியலுக்கு மீண்டும் வராமலிருக்க கோட்டா தீர்மானிச்சிருக்கிறாராம்..! இப்பத்தான் உண்மையா நாட்டுக்கான நல்ல தீர்மானமொண்டை எடுத்திருக்கிறார்..!**



## இன்றைய நாளில்...

- ★ கி.மு. 490 – மரதன் போர்: கிரேக்கத்தில், மரதன் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் பாரசீகத்தைத் தோற்கடித்த வெற்றிச் செய்தியைத் தெரிவிக்க பிடிப்பிட்ஸ் என்ற கிரேக்க வீரன் நெடுந்தூரம் ஓடினான். மரதன் ஓட்டப்போட்டிக்கு இதனாலேயே இப்பெயர் இடப்பட்டது.
- ★ 1609 – என்றி அட்சன், அட்சன் ஆற்றைக் கண்டுபிடித்தார்.
- ★ 1848 – சுவிட்சர்லாந்து, கூட்டமைப்பு ஆட்சியை நடைமுறைப்படுத்தியது.
- ★ 1933 – அணுக்கரு தொடர்வினை குறித்த கருத்தை முதன்முதலாக லியோ சிலார்ட் அறிவித்தார்.
- ★ 1948 – முகமது அலி ஜின்னா மறைந்த அடுத்த நாள் இந்திய இராணுவம் பாகிஸ்தானின் ஹைதராபாத் மாநிலத்தினுள் நுழைந்தது. இதன்போது ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.
- ★ 1959 – லூனா 2 விண்கலத்தை சோவியத் ஒன்றியம் ஏவியது. சந்திரனை அடைந்த முதலாவது விண்கலம் இதுவாகும்.
- ★ 1977 – தென்னாபிரிக்காவின் இனவொதுக்கல் கொள்கைக்கெதிரான செயற்பாட்டாளர் ஸ்டீவ் பைக்கோ பொலிஸாரின் காவலில் இருந்தபோது கொல்லப்பட்டார்.
- ★ 1980 – துருக்கியில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.
- ★ 1992 – நாசாவின் எண்டெவர் விண்ணோடம் ஆபிரிக்க அமெரிக்கப் பெண்ணான மேய் சரோல் ஜமிசன் என்பவருடன் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 2006 – திருத்தந்தை பதினாறாம் ஆசீர்வாதப்பர் ஜேர்மனியில் நிகழ்த்திய உரையின் போது "தீங்கு விளைவிக்கிற மற்றும் மனிதத் தன்மையற்ற விடயங்களையே நபிகள் நாயகம் இவ்வுலகிற்கு அளித்தார்" என்று தெரிவித்தார். இதற்கு முஸ்லிம்கள் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து அவர் மன்னிப்புக் கேட்டார்.

# உணவு உற்பத்தியில் தன்னிறைவுக்கு அமெரிக்கா உதவிகளை வழங்கும்

## வை.எம்.எம்.ஏ. பேரவை மாநாட்டில் தூதுவர் ஜூலி சங் தெரிவிப்பு










(அஷ்ரப் ஏ. சமத்)

இலங்கை உணவு உற்பத்தித் திட்டத்தில் தன்னிறைவு பெறுவதற்கு எமது நாடு தனியார் நிறுவனங்களுக்கு உதவும் - என அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் 72ஆவது வருடாந்த மாநாடு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தலைவா் சஹிட் எம்.றிஸ்மி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அமெரிக்க தூதுவர் ஜூலி ஜே. சங், கௌரவ அதிதியாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாலிய பீரிஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் மூன்று சமூக சேவையாளர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். எக்ஸ்போ லங்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹனீப் யூசுப், பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி, கொலன்னாவை ஜே.ஜே.சமூக சேவை நிறுவனத்தின் தலைவர் ஹனீப் ஹாஜி ஆகியோருக்கான கௌரவ விருதை அமெரிக்கத் தூதுவர் வழங்கினார். அத்துடன், சிறந்த வை.எம்.எம். கிளை நிறுவனங்களுக்கும் அவர்களது திட்டங்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

இங்கு கருத்து தெரிவித்த அமெரிக்கத் தூதுவர்,

இலங்கையில் மனித உரிமைகளோடு சகல சமூகங்களும் சமமாக பல்லின மக்கள் வாழும் நாடாக இலங்கை விளங்குகின்றது. இலங்கையின் அண்மைய பொருளாதாரப் பிர்சசினையில் அமெரிக்கா இலங்கைக்கு உதவி வருகின்றது.

இலங்கைக்கு கடந்த மாதம் 1.9. பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கினோம். அத்துடன், கண்டியிலுள்ள பெண்கள் அபிவிருத்தி நிறுவனம், விவசாயம், உரம் மற்றும் போசாக்கு, மருந்துப் பொருட்கள் போன்றவற்றை மேம்படுத்துவதற்கு அமெரிக்கா உதவியளித்துள்ளது - என்றார்.

இந்த நாட்டிலுள்ள விவசாயிகள் விவசாயத் துறையில் மரக்கன்றுகளை நட்டு உணவு உற்பத்தித் திட்டத்தில் தன்னிறைவு பெறுவதற்கு எமது நாடு தனியார் நிறுவனங்களுக்கு உதவும் எனவும் அங்கு தூதுவர் சுட்டிக்காட்டினார்.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. நிறுவனத்தின் ஊடாக இளம் பட்டதாரிகளுக்கான நாளைய தலைவர்கள் என்ற பயிற்சிக்கு பட்டறைக்கு அமெரிக்க உதவித் திட்டத்தின் ஊடாக உதவி வருகின்றோம். எனக்கு முன் உரையாற்றிய ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், இலங்கை பொருளாதாரப் பிரச்சினைகள், தேசிய ஒற்றுமை சாதாரண மனிதனுக்கு இருக்கின்ற உரிமைகள் பற்றி விரிவாகப் பேசினார். அதனையிட்டு நான் அவரை பாராட்டுகின்றேன்.

ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் உரையாற்றுகையில்,

இந்த நாட்டில் கடந்த 2 மாதங்களுக்குள் 30இற்கும் மேற்பட்ட கொலைகள் நடைபெற்றுள்ளன. அதனைவிடுத்து சாதாரணமான பொதுமக்கள் இளைஞர், யுவதிகள், தமது உரிமை சம்பந்தமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் வீடுகளுக்குச் சென்றவர்கள் என்றரீதியில் நாளாந்தம் பொலிஸார் கைதுசெய்து வருகின்றனர்.

ஒரு குடிமகனுக்கு இருக்கின்ற சுதந்திர உரிமைகள், மனித உரிமை சம்பந்தமான சகல உரிமைகளும் சாதாரணமான ஒரு பொதுமகனுக்கு இருத்தல் வேண்டும். சகல சமூகங்களும் சமமாக வாழ்வதற்கு இந்த நாட்டில் இருத்தல் வேண்டும். காணாமல்போனோரின் குடும்பங்களுக்கு உரிய நன்மைகள், தீர்வுகள், இழப்பீடுகள் கிடைத்தல் வேண்டும் - என்றார்.



இந்நிகழ்வில் அகில இலங்கை வை.எம். எம்.ஏ. தலைவர் சஹிட் றிஸ்மி, பதில் பொதுச் செயலாளர் ஆசிப் சுக்ரி, பொருளாளர் யு.எம்.பாசில், முன்னாள் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

அத்துடன், வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் நாட்டின் சகல பாகத்திலிருந்தும் 150இற்கும் மேறபட்ட வை.எம்.எம்.ஏ. கிளைத் தலைவர்களும் செயலாளர்களும் முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# நாட்டை வங்குரோத்தாக்கிய காகம் அமெரிக்கா பறந்தது

## ரணில் நன்றிக்கடனை நிறைவேற்றுவதாக சஜித் குற்றச்சாட்டு



நாட்டை வங்குரோத்தாக்கிய காகம் அமெரிக்காவுக்கு செல்வதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மொட்டுக் கட்சிக்கு தனது நன்றிக்கடனை நிறைவேற்றுவதாக குறிப்பிட்டார்.

களுத்துறை மாவட்டத்தின் பாணந்துறை தேர்தல் தொகுதியில் நேற்றுமுன்தினம் (10) நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதிக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி, ராஜபக்ஷக்களுக்கு கடன்பட்டிருந்தாலும், ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது ஐக்கிய மக்கள் கூட்டணியோ ராஜபக்ஷர்களுக்கு கடன்பட்டிருக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ராஜபக்ஷக்களின் அல்லது அரசாங்கத்தின் கடனை செலுத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்திக்கு தேவைப்பாடு இல்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்நாட்டின் இருநூற்றி இருபது இலட்சம் மக்களின் கடனை அடைத்து அவர்களின் வாழ்வை சிறப்புறச் செய்யும் தேவைப்பாடு மாத்திரமே ஐக்கிய மக்கள் சக்திக்கு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நாட்டை வங்குரோத்தாக்கிய காக்கை கூட சுதந்திரமாக அமெரிக்கா செல்கிறது எனவும், இந்நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் ஒன்றிணைந்து விரட்டியடித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் இலங்கைக்கு திரும்பியுள்ளதாகவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அவர்கள் அந்த சுதந்திரத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் போதே இந்நாட்டின் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்ட லஹிரு மற்றும் தமிதா போன்றோரை அரசாங்கம் சிறைக்கு அனுப்பிக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

அன்று இந்நாட்டில் அடக்குமுறையை ஆரம்பித்தவர்கள் மஹிந்த ராஜபக்ஷவுக்காக அலரி மாளிகையில் திரண்ட குண்டர்கள்தான் என நினைவுகூர்ந்த எதிர்க்கட்சித் தலைவர், அவர்கள் அனைவரும் இன்று சுதந்திரமாக நடமாடுவதாகவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் கூட இலங்கையில் ஒரு புதிய மக்கள் அபிப்பிராயம் உருவாக வேண்டும் என அறிவித்துள்ள நிலையில், அரசாங்கம் மொட்டுவின் 134 பேரின் அபிப்பிராயத்திற்கு அடிபணிந்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஒட்டுமொத்த நாட்டு மக்களும் ஒன்றிணைந்து பொதுப் போராட்டத்தின் மூலம் ஜனாதிபதியையும் பிரதமரையும் விரட்டியடித்ததாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஆனால், அதற்குப் பதிலாக மொட்டுவை பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனாதிபதியொருவரே நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே, தற்போதைய ஜனாதிபதி மொட்டுக்கு தனது நன்றிக்கடனை நிறைவேற்றி வருவதாகவும், மக்களுக்கு ஆற்றவேண்டிய தமது கடமைகளை மறந்துவிட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# பிறமொழிகளை கற்பதால் தாய்மொழி அழிந்துவிடாது

## இந்தியத் துணைத்தூதுவர் நட்ராஜ் தெரிவிப்பு



பிறமொழிகளை கற்பதால் எமது தாய்மொழி அழிவடைந்து விடாது. மாறாக, எமது அறிவே விருத்தியடையும் - என யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியின் 75ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது இந்தியத் துணைத் தூதர் இதனை தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி சமஸ்கிருதம், பாலி, ரஷ்ய, சீன மொழிகள் உட்பட பலவற்றை தெரிந்திருந்தார். பிறமொழியை கற்பதால் எமது மொழியையோ கலாசாரத்தையோ இழந்து விடுவோம் என்கிற பயம் தமிழர்களிடம் காணப்படுகிறது.

இன்றைய நவீன உலகத்தில் கலாசாரங்களை புரிந்துகொள்வதற்கு மொழி அவசியம். ஒரு மொழியை அதிகம் கற்றால் இன்னொரு மொழியை இழந்து விடுவோமோ என்கிற பயம் தேவையில்லை. அது அறிவுடன் சம்பந்தப்பட்டது. உணர்வுபூர்வமாக தாய்மொழி மீது இருக்கின்ற பற்று என்பது எப்போதும் எம்மை விட்டுச் செல்லாது. எமது கலாசாரத்தை மற்றவர்களுக்கு புரியவைக்கவும் மற்றவர்களின் கலாசாரத்தை நாம் புரிந்துகொள்வதற்கும் மொழி அவசியம் – என்றார்.

# பிரித்தானிய மகாராணியாருக்கு கொழும்பில் ஒருவர் அஞ்சலி

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

பிரித்தானியாவின் 2ஆம் எலிசபெத் மகாராணியாருக்கு கொழும்பில் நபர் ஒருவர் அஞ்சலி செலுத்தியுள்ளார். புறக்கோட்டை, போதிராஜ மாவத்தையில் சுமார் 30 வருடங்களுக்கும் மேலாக தோல்பொருள் விற்பனை செய்துவரும் ஜினதாஸ லியனகே என்பவர் பிரித்தானிய மகாராணி பரம்பரையில் அன்பும் ஆசையும் கொண்டு வந்துள்ளார். இவர் பிரித்தானிய இளவரசி மற்றும் அவரது குடும்பங்களின் நிழற்படங்களை சேகரித்தும் வைத்துள்ளார்.

ஜினதாஸ என்பவர் நேற்று முன்தினம் புறக்கோட்டை போதிராஜ மாவத்தையில் அவரது கடை இருந்த இடத்தில் பிரித்தானிய மகாராணிக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவரது உருவப்பட பெனர்களை காட்சிப்படுத்தியும் அவரால் சேகரிக்கப்பட்ட



இளவரசி குடும்பத்தின் நிழற்படங்கள், செய்திகள் உள்ளிட்ட ஆவணங்களை வைத்து அவருக்கு தீச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

அவ்வீதியில் நடந்து சென்றவர்களுக்கு பிரித்தானிய குடும்பத்தின் வரலாற்று விளக்கங்களையும் அவர் வழங்கியிருந்தார்.

ஜினதாஸவின் போதிராஜ மாவத்தையிலுள்ள கடை சில மாதங்களுக்கு முன் தீயினால் எரிந்து முற்றாக அழிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# போராட்டக்காரர்களை ராஜபக்ஷக்களுடன் இணைந்து ஒடுக்குகிறார் ஜனாதிபதி ரணில்

## ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஸ்டாலின் குற்றச்சாட்டு



(யாழ். செய்தியாளர்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷ கும்பலுடன் இணைந்து போராட்டக்காரர்களை ஒடுக்கும் வேலையில் ஈடுபடுகின்றார். போராட்டக்காரர்களை அடக்குவதற்காக பயங்கரவாதத் தடைச்சட்டத்தை கையில் எடுத்துள்ளனர். இதற்கு எதிராக நாம் அனைவரும் குரல் கொடுப்போம் - என இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்தி வழிப் போராட்டமாக சென்று கையெழுத்து திரட்டும் நடவடிக்கை நேற்றைய தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் ஆரம்பிக்கப்பட்ட போதே ஜோசப் ஸ்டாலின் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதன் பாதிப்பு காரணமாக தற்போதும் 46 அரசியல் கைதிகள் சிறையில் உள்ளனர். சமூக வலைத்தளங்களில் புகைப்படங்களை பதிவேற்றியவர்களும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

தமிழ் அரசியல் கைதிகள் தற்போது கொழும்பு மெகசின் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நாங்கள் அவர்களது உண்ணாவிரதப் போராட்டத்திற்கு பூரண ஆதரவை தெரிவிக்கின்றோம். தமிழ் மக்கள் தரப்பிலிருந்து பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராக குரல் எழுப்பப்பட்டு கையெழுத்து திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் தலைவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது, இதனால் சிங்கள மக்களும் எதிர்காலத்தில் பாதிக்கப்படுவார்கள் என தொடர்ந்து கருத்துக்களை தெரிவித்தனர். சிங்களப் பகுதிகளிலும் இராணுவ முகாம்கள் உருவாகும் என குட்டிமணி தெரிவித்திருந்தார். தற்போது என்ன நடக்கின்றது.

காலிமுகத்திடல் போராட்டம் மிக அமைதியாக இடம்பெற்றது. இதன் காரணமாக நாட்டில் பெரிய மக்கள் எழுச்சி ஏற்பட்டு ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ விரட்டியடிக்கப்பட்டார்.

134 வாக்குகளுடன் நாடாளுமன்றில் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷ கும்பலுடன் இணைந்து போராட்டக்காரர்களை நசுக்குகின்ற வேலையில் ஈடுபடுகின்றார். போராட்டக்காரர்களை அடக்குவதற்காக பயங்கரவாதத் தடைச்சட்டத்தை கையில் எடுத்துள்ளனர். இதற்கு எதிராக நாம் அனைவரும் குரல் கொடுப்போம்.

நாட்டில் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு இல்லை. பொருட்களின் விலைகளோ அதிகரித்துவிட்டன. இந்நிலையில், எதற்கு 37 இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எங்கிருந்து பணம் செலவிடப் படப்போகின்றது - என்றார்.

# கல்கிரியாகம காட்டில் ஆணின் சடலம் மீட்பு

(அநுராதபுரம் செய்தியாளர்)

கல்கிரியாகம கிரலவ பகுதியிலுள்ள காட்டுப் பகுதியில் வெட்டிக் கொலைசெய்யப்பட்டிருந்த ஆண் ஒருவரின் சடலத்தை கல்கிரி யாகம கிரானேகம பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய சென்ற பொலிஸார் பிரதேச வாசிகளின் உதவியுடன் சடலத்தை மீட்டுள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மகுலு கஸ்வெவ, தேவகூவ, கலேவல பகுதியை வசிப்பிடமாகக்கொண்ட 40 வயதுடயவர் என அடயாளம் காணப்பட்டுள்ளது.

இக்கொலைச் சம்பவம் 08 ஆம் திகதி மாலை குறித்த காட்டுப்பகுதியில் இடம்பெற்றுள்ளமை ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

போதைப்பொருள் வியாபார கொடுக்கல் வாங்கல் விடயத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளையடுத்து இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தற்போது மேற்கொண்டு வரும் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.





**செடெக் நிறுவனத்தினால் தலசீமியா செயல்திட்டத்தின் மூலம் ஏற்பாடுசெய்யப்பட்ட 'இரத்ததான முகாம்' வென்னப்புவ பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் செடெக் நிறுவன தேசிய இயக்குநர் வணக்கத்துக்குரிய லூக் நெல்சன் அடிகளார் கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார். இதன்போது வென்னப்புவ பிரதேச பொது மக்கள் இரத்ததானம் வழங்குவதில் கலந்துகொண்டனர். (படங்கள் - உடப்பு செய்தியாளர்)**

# பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை இரத்து செய்யக் கோரி ஊர்தி வழியில் கையெழுத்துச் சேகரிப்பு யாழில் ஆரம்பம்



(யாழ். நிருபர்)

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை இரத்து செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்தி வழிப் போராட்டமாக சென்று கையெழுத்து திரட்டும் நடவடிக்கை நேற்று முன்தினம் (10) காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் சிதறு தேங்காய் உடைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த ஊர்தி வழிப் போராட்டம் காங்கேசன்துறை தொடக்கம் 25 மாவட்டங்களுக்கும் சென்று அம்பாந்தோட்டையை சென்றடையவுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியும், சர்வஜன நீதி அமைப்பும் முன்னெடுத்த கையெழுத்து திரட்டும் பிரசார நடவடிக்கையின் ஆரம்ப நிகழ்வில் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், தொழிற்சங்கத் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன் ஆகியோரும் சுரேஷ் பிரேமச்சந்திரன், சரவணபவன், சி.வி.கே.சிவஞானம், இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், இலங்கை தமிழரசு கட்சியின் வாலிபர் முன்னணியின் கி. சேயோன், மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை தவிசாளர்கள், உறுப்பினர்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

குறித்த ஊர்தி வழிப் போராட்டம் மூலம் மூன்று நாட்களுக்கு யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று கையெழுத்தை சேகரிக்கவுள்ளதுடன், தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## ஹாட்லி கல்லூரி மாணவர்களால் 2 இலட்சம் பனை விதைகள் நடுகை திட்டம் ஆரம்பம்



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் வடமராட்சி ஹாட்லி கல்லூரியின் 1998 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தர அணியினரினால் நேற்று முன்தினம் (10) இரண்டு இலட்சம் பனை விதைகள் நடும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் மற்றும் உள்ளூர் பழைய மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில் விருந்தினர்களாக வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி, பனை அபிவிருத்திச் சபை பொது முகாமையாளர் திருலோகநாதன், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை முகாமையாளர் பொறியியலாளர் ஜெகதீசன் ஆகியோர் கலந்துகொண்டு பனம் விதைகளை நடுகை செய்து தொடக்கிவைத்தனர்.

காலை 8 மணி முதல் ஆரம்பமான குறித்த நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 4 மணிவரை இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 4.00 மணி வரையும் குறித்த இரண்டு இலட்சம் பனம் விதைகள் நடுகை இடம்பெற்றது.

## கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியின் 75ஆவது நினைவேந்தல் யாழ். பல்கலையில் அனுஷ்டிப்பு



(யாழ். நிருபர்)

கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியின் 75ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தொல்லியல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் அனுசரணையில் கடந்த வெள்ளிக்கிழமை (09) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், வாழ்நாள் பேராசிரியருமான பொன்.பாலசுந்தரம்பிள்ளை, ஓய்வுபெற்ற வரலாற்றுத்துறைப் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், யாழ். இந்தியத் துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் மகேஸ்வரன், யாழ்ப்பாணப் பிராந்திய தொல்லியல் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் பந்துஜீவ ஆகியோர் கலந்துகொண்டிருந்ததுடன், தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் அனுர மனதுங்க உட்பட அதிகாரிகள் இணையவழியில் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், இந்துகற்கைகள் பீட பீடாதிபதி சுகந்தி, உளவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கஜவிந்தன், தொல்லியல் திணைக்கள ஆய்வு அதிகாரி கைலைவாசன் உள்ளிட்டோர் ஞாபகார்த்த உரைகளை ஆற்றினர்.

இதன்போது நிகழ்வில் பங்கேற்றவர்களுக்கு நினைவுச்சின்னங்கள் வழங்கப்பட்டன.

## செல்வச் சந்நிதியில் 70 பவுண் நகை திருட்டு

(யாழ். நிருபர்)

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய தேர்த் திருவிழாவில் பங்கேற்ற அடியார்களிடம் சுமார் 70 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தங்க நகைகளை பறிகொடுத்த 18 பேர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய தேர்த் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை (19) இடம்பெற்றது.

அதன்போது, தேர்த் திருவிழாவில் பங்கேற்ற அடியார்களிடம் திருடர்கள் கைவரிசையை காட்டியுள்ளனர்.

தங்க நகைகளை பறிகொடுத்த 18 பேர் வழங்கிய முறைப்பாடுகளின் அடிப்படையில் சுமார் 70 தங்கப் பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

## போபத்தலாவ தேசிய கால்நடைப் பண்ணையை தனியார்மயமாக்குவதை எதிர்த்துப் போராட்டம்



(க.கிஷாந்தன்)

அரசுக்கு சொந்தமான போபத்தலாவ தேசிய கால்நடைப் பண்ணையை தனியார்மயமாக்கும் திட்டத்திற்கு எதிராக பொதுமக்கள் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

போபத்தலாவ தேசிய கால்நடைப் பண்ணை வளாகத்திற்கு முன்பாக, அங்கு பணிபுரியும் சுமார் 150 இற்கும் மேற்பட்ட ஊழியர்களால் இந்தப் போராட்டம் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தின் போது, போபத்தலாவ தேசிய கால்நடை பண்ணையை விற்பதை உடனே நிறுத்து, அரசாங்கமே இந்த பண்ணையை தொடர்ந்து நடத்த வேண்டும், இலாபத்தை ஈட்டிக்கொடுக்கும் பண்ணையை தனியாருக்கு விற்காதே போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்திய வண்ணம், கோஷங்களை எழுப்பியவாறு போராட்டம் சுமார் இரண்டு மணித்தியாலயங்கள் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்,

எந்தவிதமான முன்னறிவித்தலும் இல்லாமல் இரகசியமான முறையில் குறித்த தேசிய பண்ணையை தனியார் கம்பனிகளுக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றோம்.

நாளொன்றுக்கு 600 ரூபா சம்பள அடிப்படையில் நாங்கள் தொழில் செய்து வருகின்றோம். ஆனால், எங்களுக்கு சம்பள அதிகரிப்பு தேவையில்லை. மாறாக இந்த பண்ணையை தனியார்துறைக்கு வழங்க அனுமதிக்க வேண்டாம்.

இந்த கால்நடைப் பண்ணை அதிக இலாபத்துடனையே இயங்கி வருகின்றது. குளிரூட்டப்பட்ட அறையில் சொகுசாக வாழ்ந்து கொண்டு இவ்வாறான நடவடிக்கைளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டாம் எனவும், இந்த விடயத்தில் அரசாங்கம் தலையீட்டு, தொடர்ந்தும் அரசாங்கமே இந்த பண்ணையை நடத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

## இரத்தினபுரியில் ஆற்றை இடைமறித்து சட்டவிரோதமாக இரத்தினக்கல் அகழ்வு



(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரத்தினபுரி நிவித்திகல பிரதேசத்தில் ஆற்றின் இரு கரைகளையும் இணைத்து இடைமறித்து கனரக வாகனங்கள், உபகரணங்கள் ஆயுதங்களின் உதவியுடன் சட்டவிரோதமான முறையில் இரத்தினக்கல் அகழ்வு இடம் பெற்றுவருகிறது.

களுகங்கையும், வேகங்கையும் ஒன்று சேரும் தெமுவாவதத பகுதியில் இந்தச் சட்டவிரோத செயற்பாடு 24 மணித்தியாலங்களிலும் திட்டமிட்டு செயற்படுத்தப்படுவதாகவும், இரவு வேளைகளில் ஜெனரேட்டர்கள் பயன் படுத்தப்படுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

பாரிய மரங்கள், மணல் மூடைகளால் ஆற்றை இடைமறித்து நீரைத்தடை செய்து ஆற்றின் நடுவிலும், ஆற்றின் இரு கரைகளிலும் இரத்தினக்கல் அகழ்வுக்காக மண் தோண்டப்படுவதால் ஆற்று நீர் சேற்று நிறத்தில் காணப்படுவதாகவும், இதனால் ஆற்று நீரை பொதுமக்கள் பாவனைக்கு எடுக்க முடியாமல் சிரமப்படுவதாகவும் இவ்விடத்தில் பொலிஸார் சட்டத்தை செயற்படுத்தாது மௌனமாக இருப்பது மக்கள் மத்தியில் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

## நானுஓயா பகுதியில் கர்ப்பிணித் தாய்மாருக்கு போசாக்கு உணவுப்பொருட்கள் வழங்கிவைப்பு



(செ.திவாகரன்)

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானுஓயா பிரதேசத்தில் 40 கர்ப்பிணிப் பெண்களுக்கு போசாக்கு உணவுப் பொருட்கள் வழங்கும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் நுவரெலியா பிரதேச சபை புதிய கட்டடத்தில் வழங்கிவைக்கப்பட்டன.

நானுஓயா பிரதான நகரில் உள்ள ஹார்ட்வேர் கடையின் உரிமையாளர் திருச்செல்வம் கண்ணாவில் சொந்த பணத்தில் வழங்கப்பட்ட இந்த உணவுப் பொதிகளில் கர்ப்பிணிப் பெண்களுக்கு தேவையான ஊட்டச்சத்துகள் கொண்ட, குறிப்பாக, சரிவிகித உணவு உட்கொண்டால் வயிற்றில் உள்ள சிசுவிற்கும் போதுமான ஊட்டச்சத்து கிடைக்கும் வகையில் பொருத்தமான பெறுமதியான பொருட்கள் இப்பொதியில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

தற்போது நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடியில், பொருட்களின் விலை ஏற்றத்தினை கண்டுகொள்ளாமல் இவ்வாறாக செயற்படும் திருச்செல்வத்தை பலரும் வாழ்த்துகின்றனர். இந்நிகழ்வில் நானுஓயா பொலிஸ் பொறுப்பதிகாரி, நுவரெலியா பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் பல சமூக ஆர்வலர்கள் மற்றும் சமூக சேவை நோக்கம் கொண்ட இளைஞர்கள் ஆகியோரும் கலந்துகொண்டு இந்த உணவுப் பொருட்களை வழங்கிவைத்தனர்.

## வீதிகளிலுள்ள இடர்களை அகற்றுமாறு மத்திய மாகாண ஆளுநர் உத்தரவு

(கண்டி நிருபர்)

பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வீதிகளில் உள்ள இடர்களை அகற்றுமாறு மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

பாதையோரத்தில் உள்ள வடிகானில் திடீரென நீர் மட்டம் அதிகரித்து அதிக மழை வடிந்தோடியமையினால் வடிகான்கள் தெளிவாக விளங்காத நிலையில் தறுதலாக விழுந்து உயிரிழப்பு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறான உயிரிழப்பு சம்பவங்கள் நிகழும் முன், வீதிகளில் இருந்து அவ்வாறான இடர்களை அகற்றுமாறு மத்திய மாகாண திணைக்களங்கள், கண்டி மாநகர சபை, மற்றும் உள்ளூராட்சி அமைப்புக்களுக்கு மத்திய மாகாண ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

இது விடயமாக விசேட கவனம் செலுத்தும்படி உள்ளூராட்சி மற்றும் கண்டி மாநகர சபை ஆணையாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதோடு, ஏதேனும் இடர்கள் வீதிகளில் இருக்குமாயின் உடன் அவற்றை அகற்றுமாறு ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் அதற்கான பொறுப்பு சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அதிகாரிகள் ஏற்க வேண்டி வரும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, ஆபத்து ஏற்படும் என வீதிகளில் அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களை திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான சம்பவங்கள் மத்திய மாகாணத்தில் நடைபெறாதவாறு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

மத்திய மாகாணத்தில் அவ்வாறான இடங்கள் இருப்பின் மத்திய மாகாண ஆளுநர் அலுவலகம் அல்லது அருகில் உள்ள உள்ளூராட்சி சபைக்கு 0812232498 என்ற இலக்கத்திற்கு அறிவிக்குமாறும் பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# Doc990 அநுராதபுரத்திலுள்ள கனோலா மருத்துவமனையுடன் பங்காளராக இணைகின்றது வட மத்திய மாகாணத்திலுள்ள நோயாளிகளுக்கு வசதியான முன்பதிவு சேனலிங் அனுபவத்தை வழங்குதல்




டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி மூலம் இயங்கும் இலங்கையின் முன்னணி டிஜிட்டல் ஹெல்த்கேர் தீர்வு வழங்குனரான Doc990, வடமத்திய மாகாணத்தில் உள்ள நோயாளிகளுக்கு வசதியான மருத்துவ சேவை அனுபவத்தை வழங்குவதற்காக அண்மையில் அனுராதபுரம் கனோலா மருத்துவ மனையுடன் கைகோர்த்துக்கொண்டது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கனோலா வைத்தியசாலையானது வடமத்திய மாகாணத்திலுள்ள மிகப்பெரிய தனியார் வைத்திய சாலையாகும். மேலும் சர்வதேச மருத்துவத் தரங்களுக்கேற்ப சிறந்த மருத்துவ சேவைகளை அனைவருக்கும் ஏற்ற விலையில் வழங்கி இந்த நாட்டின் சுகாதாரத்துறையில் புரட்சியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த மருத்துவமனையானது வெளிநோயாளர் சேவைகள், பொது விசாரணைகள், உள்நோயாளிகள் சேர்க்கைகள், அறுவை சிகிச்சை, பற்கள் தொடர்பான சேவைகள் மற்றும் தீவிர சிகிச்சை சேவைகள் ஆகியவற்றையும் வழங்குகிறது. மேலும், உள்நாட்டில் மருந்தக சேவை மற்றும் முழுமையாக பொருத்தப்பட்ட ஆய்வுகூடம் உள்ளிட்ட அதிநவீன வசதிகளுடன் முழுமையாக செயற்படுகின்றது. இந்த ஒத்துழைப்பின் மூலம், Doc990 சேவையுடன் இணைந்துள்ள வட மத்திய மாகாணத்தின் வாடிக்கையாளர்கள் 990இற்கு அழைப்பை ஏற்படுத்தி, www.doc.lkக்கு சென்று அல்லது Doc990 மொபைல் app ஊடாகவும் கனோலா மருத்துவமனை வழங்கும் பல சேவைகளிலிருந்து தாங்கள் விரும்பும் சேவை அல்லது சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

Digital Health Services (Pvt) Ltd ஆல் நிர்வகிக்கப்படும் Doc990, இலங்கையின் முன்னணி டிஜிட்டல் சுகாதார தீர்வு வழங்குனராகும், இந்தச் சேவைக்காக தமது கையடக்கத் தொலைபேசிகள் மூலம் பதிவுசெய்யும் வாடிக்கையாளர்களுக்கு டிஜிட்டல் சுகாதார சேவைகளை வழங்குகிறது. 2016 இல் நிறுவப்பட்ட டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் துணை நிறுவனமான Doc990, 140இற்கும் மேற்பட்ட மருத்துவமனைகளில் 5000இற்கும் மேற்பட்ட மருத்துவர்களுடன் வாடிக்கையாளர்களை இணைக்கிறது.

# அங்குரார்ப்பண "Bankers on Bicycles" சைக்கிள் ஓட்ட நிகழ்விற்காக வங்கியாளர்கள் கைகோர்த்துள்ளனர்




DFCC வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி. நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி மற்றும் சம்பத் வங்கி பிஎல்சி ஆகியவை அங்குரார்ப்பண "Bankers on Bicycles" சைக்கிள் ஓட்ட நிகழ்விற்காக சமீபத்தில் கைகோர்த்து செயல் பட்டுள்ளன. இலங்கையில் முதன்முதலாக இடம்பெற்ற "Bankers on Bicycles" நிகழ்வானது உங்கள் வாழ்க்கை நடைமுறையில் சைக்கிள் ஓட்டுதலை இணைத்து ஒரு நிலைபேற்றியல்கொண்ட வாழ்க்கை முறையை மேம்படுத்த முயல்கிறது. இது மாதாந்தம் இடம்பெறும் ஒரு நிகழ்வாக அமையும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இதில் பங்கேற்கின்ற ஒவ்வொரு வங்கியும் சுழற்சி அடிப்படையில் செயல்பாடுகளுக்கு பொறுப்பு வகிக்கவுள்ளது.

2022ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 26ஆம் திகதி காலை 6 மணிக்கு கொழும்பு - 03இல் உள்ள DFCC வங்கியின் தலைமை அலுவலகத்தில் அங்குரார்ப்பண சைக்கிள் சவாரி ஆரம்பமானது. இதில் பங்குபற்றிய நான்கு வங்கிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 150இற்கும் மேற்பட்ட வங்கியாளர்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதில் பங்கேற்றவர்களில் நான்கு வங்கிகளின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட நிர்வாகத்தினர் மற்றும் அனைத்து பணிநிலை ஊழியர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பல்வேறு வகையான சைக்கிள் ஓட்டுநர்கள் உள்ளடங்கியிருந்ததுடன், நிகழ்வு அனைத்து ஊழியர்களும் பங்கேற்கும் வகையில் அமையப்பெற்றது. இம்முறை, சைக்கிள் ஓட்டுபவர்களை தெஹிவளைக்கு அழைத்துச் சென்று திரும்பும் நகர சுற்றுவட்டத்தை "Bankers on Bicycles" நிகழ்வு ஒழுங்கமைத்திருந்தது.

# 2023 நிதியாண்டின் முதல் காலாண்டில் எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பிஎல்சி நிலைபேறான வளர்ச்சியை பதிவுசெய்துள்ளது



சரக்குக் கையாளல், ஓய்வு விருந்தோம்பல் மற்றும் முதலீடுகள் போன்ற துறைகளில் ஈடுபாட்டைக் கொண்டுள்ளதுடன், 34 நாடுகளின் 70இற்கும் அதிகமான நகரங்களில் தனது பிரசன்னத்தைக் கொண்டுள்ள இலங்கையின் முன்னணி பொதுப் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் ஒன்றாகத் திகழும் எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பிஎல்சி, 2022 ஜூன் 30ஆம் திகதியுடன் நிறைவடைந்த நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் உறுதியான நிதிப் பெறுபேறுகளைப் பதிவுசெய்துள்ளதாக அறிவித்துள்ளது.

உறுதியான தந்திரோபாய நிறைவேற்றம் மற்றும் அடிப்படை அம்சங்களில் கவனம் செலுத்தல் போன்றவற்றினூடாக எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பிஎல்சி, ரூ. 235.1 பில்லியனை (வருடாந்த உயர்வு +146%) வருமானமாகவும், தேறிய வட்டியாக ரூ. 36.9 பில்லியனையும் (வருடாந்த உயர்வு +156%) மற்றும் வரிக்குப் பிந்திய இலாபமாக ரூ. 20.1 பில்லியனையும் (வருடாந்த உயர்வு +220%) பதிவுசெய்துள்ளது.

எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பிஎல்சி குழும பிரதம நிறைவேற்று அதிகாரி ஹனீஃப் யூசுஃப் கருத்துத் தெரிவிக்கையில், "எளிமையான சொத்துகளைக்கொண்ட எமது வியாபார மாதிரி, சர்வதேச வலையமைப்பு, உறுதியான ஐந்தொகை மற்றும் வியாபாரத்தை ஒன்றிணைந்து அணுகுவது மற்றும் உறுதியான தலைமைத்துவம் போன்றன, சகல பங்காளர்களுக்கும் எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பிஎல்சியை பிரத்தியேகமான பெறுமதிக் கூறாக அமையச் செய்துள்ளன" என்றார்.

# கம்பஹா தக்சிலா கல்லூரியின் மாணவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் றைனோ



கம்பஹா மாவட்டத்தில் காணப்படும் பழமையான பாடசாலைகளில் ஒன்றான தக்சிலா கல்லூரி 2021 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின்போது பரவலாக பேசப்பட்டிருந்தது. பரீட்சை இடம்பெற்ற காலப்பகுதியில் பெய்த கடும் மழை காரணமாக சேதமடைந்த கட்டடத்தில் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். பொதுமக்கள் மற்றும் ஊடகங்கள் இணைந்து இந்தப் பாடசாலையின் நிலையை வெளி உலகுக்குக் கொண்டுவந்திருந்தனர். இதனை கவனத்திற்கொண்ட றைனோ ரூஃபிங் புரொடக்ட்ஸ் லிமிடெட், பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களின் தேவையைக் கவனத்திற்கொண்டு, நாட்டின் நெருக்கடியான சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல் தம்மாலான பங்களிப்பை வழங்க முன்வந்திருந்தது.

அறுபது மாணவர்களுடன், 1992 ஆம் ஆண்டு ஜூன் 12ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையில் தற்போது 2250 மாணவர்கள் சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் பயில்கின்றனர். எவ்வாறாயினும், அப்பாடசாலை அண்மையில் பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்ததுடன், தமது வாழ்க்கையின் முக்கியமான திருப்புமுனையான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு முகங்கொடுத்திருந்த மாணவர்களையும் பாதிப்பதாக அமைந்திருந்தது. றைனோ நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரின் தலைமைத்துவத்தின்கீழ், பாடசாலையின் பாதிப்படைந்த கட்டடத்தை புனருத்தாரணம் செய்து, மாணவர்களுக்கு பாதுகாப்பான பயிலும் சூழலை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஹைனோ ரூஃபிங் புரொடக்ட்ஸ் லிமிடெட் முகாமைத்துவப் பணிப்பாளரான ஈ.ஜே.ஞானம் கருத்துத் தெரிவிக்கையில், "நாட்டின் சிறுவர்களும் இளைஞர்களும் மாற்றத்தின் முன்னோடிகளாக திகழ்கின்றனர் என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். எனவே, நாம் பொறுப்புவாய்ந்த கூட்டாண்மை நிறுவனங்கள் மற்றும் சமூகத்திலுள்ள மூத்த குடிமக்கள் எனும் வகையில், சிறந்த தலைவர்களை உருவாக்குவதற்கான உதவிகளை வழங்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளையின் வாழ்க்கையிலும் பாடசாலை என்பது அடிப்படை அம்சமாக அமைந்துள்ளது. கம்பஹா தக்சிலா கல்லூரியின் மாணவர்களுக்கு கல்வியைத் தொடர்வதற்கு சமத்துவமான வாய்ப்பை வழங்குவதற்கு நாம் தீர்மானித்தோம்.

தக்சிலா கல்லூரியின் திறமை வாய்ந்த மாணவர்களின் எதிர்காலம் சிறப்பானதாக அமைவதற்கு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்" - என்றார்.

## வணிக உலகம்

Business world

www.thamilan.lk

# சியபத /பினான்ஸ் அதன் 41ஆவது கிளையை திறப்பதன் ஊடாக அதன் வலையமைப்பை மேம்படுத்துகிறது



முதன்மை நிதி நிறுவனமான சியபத/பினான்ஸ், அதன் 41ஆவது கிளையை, இல. 46/12, சயுரு செவன, நவம் மாவத்தை, கொழும்பு 02 இல் திறந்துவைத்து, அதன் நாடளாவிய கிளை வலையமைப்பை அண்மையில் விரிவுபடுத்தியது.

கொழும்பு - 02 மற்றும் அதனைச் சூழவுள்ள புதிய வாடிக்கையாளர்களுக்கு நம்பகமான தீர்வுகளை வழங்கும் அதேவேளை, அதன் நம்பிக்கைமிகு வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான அனுபவத்தை வழங்குவதற்கு புதிய கிளை ஆவலுடன் காத்திருக்கின்றது.

புதிய கிளை திறப்பு விழா, சியபத /பினான்ஸ் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆனந்த செனவிரத்ன மற்றும் சபையின் பணிப்பாளர்களானஜெயநாத் குணவர்தன, திருமதி ஸ்ரீயாணி ரணதுங்க மற்றும் மலிந்த போயாகொட ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

# மகளிர் தொழிலதிபர்களின் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் பங்கேற்பு



வீ கனெக்ட் சர்வதேச கூட்டமைப்பு முதலீட்டுக்குதயார். சூழல் மற்றும் வணிகம் தொடர்வதற்கான பயிற்சி, பொருள் விநியோகம் மற்றும் அனைவரையும் ஒருங்கிணைக்கும் வட்ட மேசை , தொழில் நிறுவனங்களை இணைக்கும் 100இற்கும் மேலான இலங்கை பெண் தொழிலதிபர்களை இணைக்கும் நிகழ்வை நடத்தியுள்ளது. இந்த சிறப்பு நிகழ்வானது மகளிரை பொருளாதார ரீதியில் சுதந்திரமானவர்களாக மேம்படுத்தும் திட்டமாகும். இத்திட்டமானது அமெரிக்க வெளியுறவுத்துறையின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகார பிரிவு வழங்கிய நிதி மூலம் செயல்படுத்தப்படுகிறது. இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் ஜூலி சுங், இந்நிகழ்வில் தலைமை உரை நிகழ்த்தினார். இதில் பெண் தொழிலதிபர்கள் மற்றும் உள்ளூர் மற்றும் பன்னாட்டு நிறுவனப் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

"இலங்கையில் வீ கனெக்ட் சர்வதேச அமைப்பு மேற்கொள்ளும் திட்டப் பணிகளுக்கு அமெரிக்க அரசு மிகவும் தாராளமாக மனம் உவந்து நிதி அளிக்கிறது'' என்று இலங்கைக்கான அமெரிக்கj; தூதர் சுங் குறிப்பிட்டார்.

"ஆண்கள் தொழில் தொடங்கி செயல்படுவதைப்போன்றே பெண்களும் தொழிலதிபர்களாக மாறவேண்டும் என்று இந்த கூட்டமைப்பின் இலக்கு நிர்ணயித்து அதற்குரிய சூழல் மற்றும் ஸ்திரமான வளர்ச்சி வாய்ப்புகளை பெண் சமூகம் மத்தியில் இந்நாட்டில் உருவாக்கி செயல்படுத்துவது கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது'' என்று அவர் குறிப்பிட்டார்.

# Cochchi.lk உடன் SMEகளுக்கான e-commerce திறன்களை மேம்படுத்த SLT-MOBITEL உடன் இணைந்துள்ள HNB



புதிய e-commerce சந்தைகள் மற்றும் வாங்குபவர்களுடன் உள்ளூர் SMEகளை இணைக்கும், இலங்கையின் மிகவும் டிஜிட்டல் புத்தாக்க வங்கியான HNB PLC, SMEகளுக்கு புதிய ஒன்லைன் வர்த்தகத் தளமான Cochchi.lkக்கு இலவச அணுகலை வழங்க SLT-MOBITEL உடன் கைகோர்த்துள்ளது.

புதிய e-commerce தளத்தில் நுழையும்போது, இரண்டு தொழில் நிறுவனங்களின் கூட்டாண்மை HNB SMEகளுக்கு கூடுதல் பலன்களை வழங்கும். இந்த கூட்டாண்மை தொடர்பில் இடம்பெற்ற விசேட நிகழ்விற்கு HNB பிரதிப் பொது முகாமையாளர் - வாடிக்கையாளர் மற்றும் SME வங்கியியல், சஞ்சய் விஜேமான்ன - HNB உதவிப் பொது முகாமையாளர் - SME, கைலைவாசன் இந்திரவாசன், SME தயாரிப்புகள் மற்றும் கூட்டாண்மைகளின் HNB தலைவர் நிலுகா அமரசிங்க மற்றும் SLT தலைமை தகவல் மற்றும் டிஜிட்டல் அதிகாரி திலக் கம்லத், SLT பொது முகாமையாளர். மாற்றம் திட்டங்கள், இஷாரி சிறிவர்தன, SLTபிரதிப் பொது முகாமையாளர் டிஜிட்டல் திட்டங்கள், தினேஷ் பெரேரா மற்றும் SLT சிரேஷ்ட முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) - SLT தயாரிப்பு அபிவிருத்தி, லால்வின் டி சொய்சா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# SCORE இளைஞர் செயற்பாடானது பயிலுநர்களையும் பங்குதாரர்களையும் பாராட்டுகின்றது



பதினான்கு மாவட்டங்களைச் சேர்ந்த 280 இளைஞர், யுவதியருக்குத் தங்களின் வாழ்வையே மாற்றியமைக்கின்ற பயிற்சி வாய்ப்புகளை வழங்கிய சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கம் (SCORE) இளைஞர் செயற்பாடானது (SYA), ஜூலை மாதத்தில் இளைஞர் பாராட்டு மற்றும் விருது வழங்கும் விழாக்கள் என ஆறு நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்தியது.

ஆறு விழாக்களும் கிழக்குப் பிராந்தியத்தையும் (மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்கள்), வடக்குப் பிராந்தியத்தையும் (யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா), தெற்குப் பிராந்தியத்தையும் (மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை), மத்திய பிராந்தியத்தையும் (கண்டி மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்கள்) காலி மற்றும் கொழும்பு ஆகியவற்றையும் உள்ளடக்கியது. இந்நிகழ்வின்போது, பயிலுநர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும் ஏனைய பங்குதாரர்களுக்கு இந்தப் புதிய முயற்சியை மாபெரும் வெற்றியடையச் செய்தமைக்காக அவர்களின் பெறுமதிமிக்க பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் பாராட்டுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.


**திகதி 09.09.2022 — வெள்ளிக்கிழமை — உத்தியோகபூர்வ முடிவுகள் — www.nlb.lk — NLB**

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் : 4873 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,986,770.00 — ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 5 3 2 7 3 9 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,454,978.00

**கொவிசெத** (Govisetha) — சீட்டிழுப்பு இலக்கம் 3115 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,180,660.00 — ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 08 10 13 48 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 75,358,040.80

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் : 1328 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,881,460.00 — வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 5 0 4 8 7 9 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,548,322.00

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் : 903 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,148,940.00 — வெற்றி இலக்கினம் G — வெற்றி இலக்கங்கள் 23 32 34 57 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 124,847,852.00

**ராசி சுப பலன்** (Handahana) — சீட்டிழுப்பு இலக்கம் : 182 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,814,400.00 — இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 06 38 45 54 — விசேட இலக்கினம் சிம்மம் — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,599,254.40

**Mega POWER மெகா பவர்** — கோடி 26+ — சீட்டிழுப்பு இலக்கம் 1221 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,190,560.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 269,646,250.00 — I 17 31 35 41 51 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**திகதி 10.09.2022 — சனிக்கிழமை — உத்தியோகபூர்வ முடிவுகள் — www.nlb.lk — NLB**

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் : 4874 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,351,400.00 — ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 0 5 0 3 7 1 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,282,243.00

**கொவிசெத** (Govisetha) — சீட்டிழுப்பு இலக்கம் 3116 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,669,700.00 — ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 05 06 30 73 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 75,503,358.40

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் : 1329 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,147,780.00 — வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 5 7 9 1 0 4 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,571,458.40

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் : 904 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,513,540.00 — வெற்றி இலக்கினம் T — வெற்றி இலக்கங்கள் 14 17 20 53 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 124,847,852.00

**ராசி சுப பலன்** (Handahana) — சீட்டிழுப்பு இலக்கம் : 183 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,124,160.00 — இலக்கினம் கன்னி — வெற்றி இலக்கங்கள் 08 21 44 57 — விசேட இலக்கினம் கன்னி — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,599,254.40

**Mega POWER மெகா பவர்** — கோடி 26+ — சீட்டிழுப்பு இலக்கம் 1222 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,635,900.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 269,788,050.00 — U 26 01 40 67 80 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 011-4607000, 011-4607001-2 — பெக்ஸ்: 011-4669475 — Email : info@nlb.lk — Web : www.nlb.lk

# சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்த 85 பேர் கைது!

**சந்தேகநபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைப்பு**





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பை அண்மித்த கடற்பரப்பில் கடற்படையினரால் நேற்று முன்னெடுக்கப்பட்ட ரோந்து நடவடிக்கையின்போது, சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக வெளிநாட்டுக்குச் செல்ல முயற்சித்ததாக சந்தேகிக்கப்படும் 85 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் பயணித்த நீண்டநாள் மீன்பிடிப் படகும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடல் மார்க்கமாக முன்னெடுக்கப்படும் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக கடற்படையினரால் மேற்கொள்ளப்படும் ரோந்து நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. அதனடிப்படையில், கிழக்கு கடற்படைக் கட்டளைப்பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட ரோந்து நடவடிக்கையின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த படகில் 18 வயதுக்கு மேற்பட்ட அறுபது (60) ஆண்கள், பதினான்கு (14) பெண்கள் மற்றும் 18 வயதுக்குட்பட்ட பதினொரு பேர், கப்பலின் நடத்துநர்களுடன் சட்டவிரோதமாக இந்த நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு செல்ல முயன்றதாக சந்தேகிக்கப்படுகிறது.

இவ்வாறு கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டவர்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, மூதூர், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் மடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், குறித்த குழுவும் பல நாள் மீன்பிடிப் படகும் தற்போது திருகோணமலை துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக திருகோணமலை துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

கடற்படையினரும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து மட்டக்களப்பு துத்திவரம் கடற்கரைப் பகுதியில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் கைப்பற்றப்பட்ட பல நாள் மீன்பிடிக் கப்பலுக்கு நபர்களை ஏற்றிச்சென்றதாக சந்தேகிக்கப்படும் நான்கு (04) டிங்கி படகுகளுடன் ஐந்து சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களுடன் டிங்கி படகுகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

பணம் சம்பாதிப்பதற்காக பாதுகாப்பற்ற கப்பல்களை பயன்படுத்தி கடத்தல்காரர்களின் மனித கடத்தலில் சிக்கி, நாட்டிலிருந்து சட்டவிரோதமாக குடியேற முயற்சித்து, உயிரைப் பணயம் வைத்து, சட்டத்தின் முன் தண்டனை பெறுவதைத் தவிர்க்குமாறு கடற்படை பொதுமக்களிடம் வலியுறுத்துகிறது.

# எழுத்தாளர் சுபைர் இளங்கீரன் 26ஆவது நினைவுதினம் இன்று



இளங்கீரன் (சுபைர் இளங்கீரன் மறைவு 12 செப்டெம்பர் 1996) ஈழத்து முஸ்லிம் எழுத்தாளர்களில் தனித்துவமானவர். புதினம், சிறுகதை, நாடகம், இலக்கிய விமர்சனம், இலக்கியக் கட்டுரைகள் என்பவற்றில் மட்டுமல்லாமல் பத்திரிகையாளராகவும் சேவையாற்றியிருக்கிறார். ஏறத்தாழ இருபதுக்கு மேற்பட்ட புதின நூல்களை எழுதிச் சாதனை புரிந்தவர். சிறந்த மேடைப் பேச்சாளர். மரகதம் என்ற இலக்கிய சஞ்சிகையை 1961இல் தொடங்கி சில காலம் நடத்தினார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தோற்றத்தோடு அதில் இணைந்து செயற்பட்டவர்களில் ஒருவர்.

சுபைர் இளங்கீரன் 1927ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்தார். 20 வயதுமுதல் எழுத்துத்துறையில் ஈடுபாடு காட்டி வந்துள்ளார். மலேசியாவில் இனமணி பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்த இவர், இலங்கையில் தொழிலாளி, ஜனவேகம் ஆகிய அரசியல் ஏடுகளின் பிரதம ஆசிரியராக பணியாற்றியுள்ளார். அரசியல், பொருளாதாரம், சரித்திரம், சமூகப் பிரச்சினைகள், மதம் சார்ந்த கட்டுரைகள் எழுதியிருக்கிறார். தினகரன் பத்திரிகையில் இவர் தொடராக எழுதிவந்த 'நீதியே நீ கேள்' தொடர்கதை வாசகர்களால் மிகவும் வரவேற்கப்பட்டதோடு பின்னர் நூலாக வெளிவந்தது.

**வானொலி நாடகங்கள்**

இலங்கை வானொலி தேசிய சேவையில் இவர் எழுதிய ஏராளமான நாடகங்கள் ஒலிபரப்பாகின. 'மனித புராணம்', 'வாழப்பிறந்தவர்கள்' போன்ற தொடர் நாடகங்களும் அவற்றில் அடங்கும்.

**மேடை நாடகம்**

பாரதி நூற்றாண்டையொட்டி இவர் எழுதித் தயாரித்த மகாகவி பாரதி நாடகம் 1982 டிசம்பரிலும், 1983 மார்ச்சிலும் கொழும்பில் மேடையேறியது.

ஒரே அணைப்பு, மீண்டும் வந்தாள், பைத்தியக்காரி, பொற்கூண்டு, கலா ராணி, மரணக் குழி, காதலன், அழகு ரோஜா, வண்ணக் குமரி, காதல் உலகிலே, பட்டினித் தோட்டம், நீதிபதி, எதிர்பார்த்த இரவு, மனிதனைப் பார், புயல் அடங்குமா? (1954, தினகரன்), சொர்க்கம் எங்கே (1955, தினகரன்) மனிதர்கள் (1956, தினகரன்) , இங்கிருந்து எங்கே? (1961, தினகரன்) , காலம் மாறுகிறது (1964, தினகரன்) , மண்ணில் விளைந்தவர்கள் (1960, தமிழன்) , அவளுக்கு ஒரு வேலை வேண்டும் (1972, வீரகேசரி).

அன்னை அழைத்தாள் (1977, சிரித்திரன்), வெளிவந்த நூல்கள், தென்றலும் புயலும் (நாவல், 1955).

நீதியே நீ கேள்! (நாவல், 1959) , ஈழத்து முற்போக்கு இலக்கியமும் இயக்கமும் (1994).

தேசிய இலக்கியமும் மரபுப் போராட்டமும் (கட்டுரைத் தொகுப்பு, 1993) , பேராசிரியர் கைலாசபதி நினைவுகளும் கருத்துகளும் (கட்டுரைத் தொகுப்பு, 1992) என்பன இவரின் நாவல்களும் ஆக்கங்களுமாகும்.

**சமூகப் பணிகள்**

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்தில் அமைந்துள்ள குளத்தடி பள்ளிவாசல் (சின்னப் பள்ளிவாசல்) சீர்திருத்த சபையின் செயலாளராகக் கடமையாற்றி பெரியகுளம், சின்னக்குளம் ஆகியவற்றைப் புனரமைத்தார்.

**மதிப்பளிப்புகள்**

இலங்கை முஸ்லிம் சமய, கலாசார இராஜாங்க அமைச்சு 1992 முற்பகுதியில் வாழ்வோரை வாழ்த்துவோம் எனும் வைபவத்தில் இலக்கிய வேந்தர் எனும் பட்டத்தையும் விருதையும் வழங்கி கௌரவித்தது.

1992இல் இந்து சமய, கலாசார இராஜாங்க அமைச்சு நடத்திய சாகித்திய விழாவில் இலக்கியச் செம்மல் எனும் பட்டமும் விருதும் இவருக்கு வழங்கப்பட்டன.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

சிறு விளம்பரம்

**வெற்றி நிச்சயம்**

உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒரு முறை என்னை தொடர்புகொண்டால் 100% வெற்றி நிச்சயம். நடக்காத காரியங்களையும் நடத்தி வைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள், பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன், முன்னேற்றத்தடை, எதிரித்தொல்லை, வழக்கு, கொடுத்த பணம் திரும்பி வர, காதல், கணவன், மனைவி பிரச்சினை, நீண்டகால நட்பின் பிரிவால் வேதனை, நன்றாக பழகி பயனடைந்துவிட்டு விலகிச்சென்றுவிட்டவர், குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு. நினைத்தது நினைத்தபடி நடக்க உடனே என்னை தொடர்புகொள்ளுங்கள். உலகப் புகழ்பெற்ற மலையாள மாந்திரீக ஜாம்பவான் தத்துவஞானி மகரிஷி தேசபந்து கௌரவ கலாநிதி ஸ்ரீமத் சுவாமிஜி 071 0192687 www.facebook.com / Srimath Suwamiji

# இடர்படுகின்ற மக்களுக்காக ஆரையம்பதி பிரதேசத்தில் இலவச நடமாடும் சேவை

(வெல்லாவெளி நிருபர்)

இடர்படுகின்ற பொதுமக்களுக்கு மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச சபையினால் இலவச நடமாடும் சேவை இடம்பெற்றது.

மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச சபையின் தவிசாளரின் தூரநோக்கு சிந்தனையின் ஏற்பாட்டில் எரிபொருள் பிரச்சினை காரணமாக போக்குவரத்து பிரச்சினைக்குள்ளாகி இடர்படுகின்ற பொதுமக்களின் நன்மைகருதி ஆரையம்பதி பிரதேச சபையின் சேவைகளை தமது மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் ஆரையம்பதி பிரதேச சபைக்குட்பட்ட கிராமங்களில் தவிசாளர் த.தயானந்தனால் முன்னெடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

இதன்பிரகாரம் தவிசாளர் த.தயானந்தன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (9) காலை 9.00 முதல் பிற்பகல் 3.00 மணிவரையுள்ள காலப்பகுதியில் தாழங்குடா பொதுநூலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மண்முனைபற்று ஆரையம்பதி பிரதேச சபை உறுப்பினர்களான மா.கந்தசாமி, ஆ.சிவலிங்கம், எஸ்.தினேஸ்குமார், சபைச் செயலாளர் ஜோ.சர்வேஸ்வரன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் மயில்வாகனம் கருணாநிதி, வருமானவரி உத்தியோகத்தர்களான வயிரமுத்து-பற்றிக், செ.கோகுலராஜன், முகாமைத்துவ உதவியாளர் சு.இளமாறன் உட்பட பிரதேச சபை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

இந்நடமாடும் சேவையானது கிரான்குளம், புதுக்குடியிருப்பு, மண்முனை, வேடர்குடியிருப்பு போன்ற கிராமங்களில் முன்னெடுக்கப்பட்டு சுமார் 1,500இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் நன்மையடைந்துள்ளதாகவும், எதிர்வரும் காலங்களில் பொதுமக்களின் நன்மை கருதி இலவச நடமாடும் சேவை முன்னெடுக்கவுள்ளதாகவும் தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது ஆதனவரி அறவீடு, வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கல், வியாபார வரி அறவீடு, மக்களின் தேவைகள், முறைப்பாடுகள், அனுமதியற்ற கட்டடங்களின் நிலைப்பாடு, நூலகங்களின் அபிவிருத்திச் செயற்பாடுகள், திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவ செயற்பாடு பிரச்சினைக்கான தீர்வுகள், சிறுவர் பூங்கா விடயங்கள், கட்டாக்காலிகளின் பிரச்சினைகள் போன்றன நடமாடும் சேவையில் பொதுமக்கள் நன்மையடைந்துள்ளார்கள்.

# ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியனாக மகுடம் சூடியது இலங்கை

**6ஆவது முறையாகவும் கிண்ணத்தை சுவீகரித்தது**




சிங்கப்பூரில் நடைபெற்றுவந்த 2022 ஆசிய வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் சிங்கப்பூரை வீழ்த்தி இலங்கை அணி 6ஆவது தடவையாக சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

இலங்கை நேரப்படி நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு சிங்கப்பூரில் நடந்த இறுதி ஆட்டத்தில் சிங்கப்பூரை 63 – 53 என்ற கணக்கில் வீழ்த்தி 6 ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியனாக வெற்றிவாகை சூடியது.

முதல் கால்பகுதியில் இலங்கை அணி பின்னடைவை சந்திக்க 19 - 13 என சிங்கப்பூர் அணி முன்னிலையை பெற்றது. தொடர்ந்து ஆரம்பித்த இரண்டாவது கால்பகுதியில் தங்களுடைய முன்னிலையை சிங்கப்பூர் அணி தக்கவைத்துக்கொண்டது. இரண்டாவது கால்பகுதியின் நிறைவில் இலங்கை அணி சிங்கப்பூரை நெருங்கியபோதும், 30 - 27 என்ற புள்ளிகள் கணக்கில் சிங்கப்பூர் அணி முன்னிலையை பெற்றுக்கொண்டது.

முதல் பாதியில் பின்னடைவுகளை சந்தித்த இலங்கை அணி, மூன்றாவது கால்பகுதியில் அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தத் தொடங்கியது. சிங்கப்பூர் அணிக்கு அழுத்தத்தைக் கொடுத்த இலங்கை அணி 46 - 38 என முன்னிலையை பெற்றுக்கொண்டது.

இதனைத்தொடர்ந்து ஆரம்பித்த இறுதி கால்பகுதியில் தங்களுடைய முன்னிலையை தக்கவைத்துக்கொண்டு போட்டியில் முன்னேற்றத்தை காட்டிய இலங்கை அணி 63 - 53 என வெற்றிபெற்று சம்பியனாக மகுடம் சூடியது. இதேவேளை, நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஹொங்கொங் அணிக்கு எதிரான அரையிறுதிப் போட்டியில் 67 - 43 என்ற புள்ளிகள் கணக்கில் இலங்கை அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

ஆட்டத்தின் முதல் காலிறுதிப் போட்டியில் முன்னிலையில் இருந்த இலங்கை அணி, நான்கு காலிறுதி போட்டிகளிலும் வெற்றிபெற்றனர். முந்தைய போட்டிகளில் 17 - 7, 32 – 16, 47 - 25 என்ற கணக்கில் இலங்கை அணி வெற்றி பெற்றது.

இதற்கிடையில், மற்றைய அரையிறுதிப் போட்டியில், சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய அணிகள் மோதின. அந்தப் போட்டியில் மலேசியவை வீழ்த்திய சிங்கப்பூர் அணி இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றிருந்தது.

இந்நிலையில், நேற்று சிங்கப்பூரில் நடைபெற்ற இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சிங்கப்பூர் அணியை 63 -53 என்ற அடிப்படையில் வென்ற இலங்கை அணி 2022ஆம் ஆண்டுக்கான ஆசிய மகளிர் வலைப்பந்து செம்பியன்ஷிப் தொடரின் வெற்றியாளராக மகுடம் சூடியது. இதனூடாக இலங்கை அணி 6ஆவது முறையாகவும் ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியனாக வென்று சாதித்துள்ளது. இதேவேளை, மூன்றாவது இடத்துக்கான போட்டியில் ஹொங்கொங் அணியை 54 - 42 என வீழ்த்திய மலேசியா அணி, மூன்றாவது இடத்தை தக்கவைத்துக்கொண்டது.

அதேநேரம், தென்னாபிரிக்காவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலக மகளிர் குலானா வலைப்பந்தாட்ட வலைப்பந்து தொடருக்கு இலங்கை மகளிர் அணி தகுதிபெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

NETBALL FEDERATION OF SRI LANKA
தேசிய வளைப்பந்து அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# இஸிப்பத்தன கல்லூரி கிண்ணத்தை சுவீகரித்தது

டயலொக் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற பாடசாலை ரக்பி லீக் - 2022 ஜனாதிபதி கிண்ணத் தொடரின் இறுதி ஆட்டத்தில் சென். ஜோசப் கல்லூரியை வீழ்த்தி இஸிப்பத்தன கல்லூரி கிண்ணத்தை சுவீகரித்தது.

கொழும்பு ஹெவ்லொக் பார்க் மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சென். ஜோசப் கல்லூரியும் இஸிப்பத்தன கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின.

பரபரப்பாக நடந்த இறுதி ஆட்டத்தின் முதல் பாதியில் 27 - 0 என்ற கணக்கில் இஸிப்பத்தன கல்லூரி முன்னிலை பெற்றது. தொடர்ந்தும் விறுவிறுப்பாக நடந்த ஆட்டத்தின் இறுதியில் 49-22 என்ற கணக்கில் சென். ஜோசப் கல்லூரியை வீழ்த்தி, இஸிப்பத்தன கல்லூரி சம்பியன் பட்டத்தை வென்றது.

இதேவேளை, முதல் அரையிறுதியில் சென். தோமஸ் கல்லூரியை வீழ்த்தி இஸிப்பத்தன கல்லூரியும் இரண்டாவது அரையிறுதியில் வெஸ்லி கல்லூரியை வீழ்த்தி சென். ஜோசப் கல்லூரியும் இறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றிருந்தன.

Dialog
SCHOOLS RUGBY
KNOCKOUTS

# அமெரிக்க ஓபன் டென்னிஸ் சம்பியனானார் ஸ்வியாடெக்



அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் தரவரிசையில் 5ஆம் நிலை வீராங்கனையான ஒன்ஸ் ஜபேர் மற்றும் ஸ்வியாடெக் மோதிய இறுதி ஆட்டத்தில் ஸ்வியாடெக் 6-2, 7-6 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன்பட்டம் வென்றார்.

கிராண்ட் சிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த இறுதி ஆட்டத்தில் 5ஆம் நிலை வீராங்கனையான துனிசியாவைச் சேர்ந்த ஒன்ஸ் ஜபேர், போலந்தின் இகா ஸ்வ்யாடெக்கை எதிர்கொண்டார்.

இதில் ஸ்வியாடெக் 6-2, 7-6 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று சாம்பியன் பட்டம் வென்றார்.

# லெஜண்ட்ஸ் கிரிக்கெட் தொடர்
# ரெய்னா, பின்னியின் அதிரடியால் இந்தியாவுக்கு முதல் வெற்றி!



இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த முன்னாள் வீரர்கள் பங்கேற்கும் லெஜண்ட்ஸ் கிரிக்கெட் தொடரில் முதல் போட்டியில் இந்தியா லெஜண்ட்ஸ் அணி அபார வெற்றிபெற்றது.

லெஜண்ட்ஸ் தொடரின் முதல் போட்டியில் இந்திய லெஜண்ட்ஸ் - தென்னாபிரிக்க லெஜண்ட்ஸ் அணிகள் மோதின. இதில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய லெஜண்ட்ஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவுசெய்தது.

இப்போட்டியில் முதலில் களமிறங்கிய இந்திய லெஜண்ட்ஸ் அணியில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான் நமன் ஓஜா 21 (18), சச்சின் டெண்டுல்கர் 16 (15) ஆகியோர் பெரிய ஓட்டங்களைப் பெறவில்லை. இதனைத் தொடர்ந்து ரெய்னா 22 பந்துகளில் 4 நான்கு ஓட்டங்கள், ஒரு ஆறு ஓட்டங்கள் உட்பட 33 ஓட்டங்களைக் குவித்து அசத்தினார். தொடர்ந்து ஸ்டூவர்ட் பின்னி 82 (42) ஓட்டங்களைச் சேர்த்த நிலையில், இறுதியில் யூசுப் பதான் 15 பந்துகளில் 4 ஆறு ஓட்டங்களைப் பறக்கவிட்டு 35 ஓட்டங்களை எடுத்தார். இறுதியில் இந்திய அணி 20 ஓவர்களின் முடிவில் நான்கு விக்கெட்டுகளை இழந்து 217 ஓட்டங்களைக் குவித்தது.

இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய தென்னாபிரிக்க அணியில் ஜோண்டி ரூட்ஸ் 38 (27) மட்டுமே சிறப்பாக செயல்பட்டார். மற்றவர்களில் புட்டிக் 23 (24), வன் வ்யாக் 26 (24) ஆகியோர் மட்டுமே ஓரளவுக்கு ஓட்டங்களைச் சேர்த்தார்கள்.

இந்திய அணி 23 ஓட்டங்களை உதிரி ஓட்டங்களாக வழங்கியது. இறுதியில், தென்னாபிரிக்க அணி 20 ஓவர்களில் ஒன்பது விக்கெட்டுகளை இழந்து 156 ஓட்டங்கள் மட்டும் எடுக்க இந்திய லெஜண்ட்ஸ் அணி 61 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

# பொருளாதார அபிவிருத்தியில் நாடு பின்னடைவதற்கு இனவாதமே காரணம்!

## முஷாரப் எம்.பி. நாடாளுமன்றத்தில் பேச்சு

"அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலேயே முதன்மையான நாடாக பார்க்கப்பட்ட இலங்கை அபிவிருத்தியடையாத நாடுகளின் நிலைமைகளை நோக்கி பின்னோக்கித் தள்ளப்பட்டதற்கான அடிப்படை காரணம் இனவாதமாகும்."

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் தனது நாடாளுமன்ற உரையின்போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இந்த நாட்டை சீரழித்தது இனவாதம் என்றால் அது மிகையாகாது. மூன்று தசாப்தங்களுக்கு மேலாக குடியிருக்கும் கொடிய யுத்தம் தோன்றுவதற்கு முன்பிருந்தே நாட்டிலுள்ள அனைத்து மக்களிடமும் இலங்கையர்கள் என்ற உணர்வு குறையத் தொடங்கியது.

ஒரு சமூகத்திற்காக - ஓர் இனத்திற்காக என்று அரசியல் செய்ய முற்பட்டோமோ அன்றிலிருந்து இந்த நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்திற்கு போய்விட்டது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனவே, இனவாதமற்ற சூழ்நிலையை உருவாக்கினால் மாத்திரமேதான் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். அல்லாமல் இந்த நாட்டை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது என்கின்ற யதார்த்தத்தை சகல இன மக்களும் புரிந்துகொள்ள வேண்டும் என்பது மிக முக்கியமாகும்.

எமது நாட்டில் அரசியல் தலைவர்களாக இருப்பவர்கள் இந்த இனவாதம், நாட்டை எவ்வாறு குட்டிச்சுவராக மாற்றியிருக்கிறது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

குறிப்பாக பார்த்தால், இப்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் எங்களுடைய போர்க் குற்றங்கள் தொடர்பில் பேசப்படும் செப்டெம்பர் மாதத்திலும் மார்ச் மாதங்களிலும் மாத்திரம்தான் இனவாத பேச்சுகள் வரும். இதுபற்றியே நாம் தொடர்ந்தும் பேசிக்கொண்டிருப்போம்.

உண்மையை சொல்லப்போனால், இலங்கை அரசாங்கம் மேற்கு நாடுகளுடன் எப்போது சார்பாக இருக்கின்றதோ அப்போதுதான் மனித உரிமைகள் பேரவையாக இருக்கலாம், சர்வதேசமாக இருக்கலாம் அரசாங்கங்களுக்கு சார்பாக நின்று அநீதி இழைக்கப்பட்டதாக குரல் கொடுக்கின்ற மக்களுக்கு எதிராக நிற்கின்ற சூழ்நிலைகளை கடந்த வரலாறுகளில் பார்க்கின்றோம்.

அதேபோன்று இந்த அரசாங்கம் மேற்குலகுக்கு எதிராக நிற்கின்றதோ அப்போதெல்லாம் இலங்கை மிகவும் நெருக்கடியான சர்வதேச அழுத்தத்திற்கு உள்ளாகின்றது. இதுதான் யதார்த்தமாகும்.

இவ்வாறான யதார்த்தங்களுக்கிடையில் மார்ச், செப்டெம்பர் மாதங்களில் மனித உரிமைகள் பேரவை வந்து போகின்றது. மக்களைப் பற்றி சிந்திக்கின்ற இலவுகாத்தகிளிபோல் எங்களுக்கு நீதி கிடைக்கும், நேர்மை கிடைக்கும், நடந்த அநீதிகளுக்கு எல்லாம் மருந்து கிடைக்கும் என பார்த்துப் பார்த்து ஏமாறும் நிலை இருக்கின்றது.

எங்கோ இருந்து யாரோ வந்து நமக்கு தீர்வு தருவதை விடுத்து இங்கே உள்ள மக்களிடையே இது எமது தேசம். நாம் எல்லோரும் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்கின்ற துளிர் விடுகின்றதோ அப்போதுதான் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்கின்ற நம்பிக்கை நமக்கு வரும்.

அவ்வாறு நம்பிக்கை இருந்தால் குற்றங்களை ஒப்புக்கொள்ளவேண்டியதாக இருக்கின்றது, சில தவறுகளை ஏற்றுக்கொள்ளவேண்டியதாக இருக்கின்றது. பொருளாதாரத்தில் நாங்கள் பின்தங்கியிருக்கின்றோம் என்றால் இந்த நிலைக்கு யார் காரணம், எந்தத் தீர்மானங்கள் காரணமாக இருந்திருக்கின்றன, இந்தத் தீர்மானத்திற்காக மன்னிப்பு கூற வேண்டியுள்ளது. மீண்டும் இந்த தவறை செய்ய மாட்டோம் என்று ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது ஜப்பானின் ஹிரோஷிமா நாகசாகி மீது குண்டு போடப்பட்டதைப் பற்றி பேசுகிறோம். மீள எழும்பியதைப் பேசுகிறோம், குண்டு போடப்பட்ட விடயத்திலும் ஜப்பானின் தவறுகள் நிறையவே இருந்தன. அந்தத் தவறுகளை ஒப்புக்கொண்டு இந்த அழிவுக்கு நாங்களும் ஒரு காரணம் என்பதை ஜப்பான் மக்கள் ஏற்றுக்கொண்டு நாட்டை ஒற்றுமையாக நின்று கட்டியெழுப்ப வேண்டும் என்று எடுத்த முயற்சியின் விளைவாக ஜப்பான் வல்லரசு நாடாக இன்று மாறியிருக்கிறது.

இதுபோன்றுதான் இங்கு எமக்குள் ஒருவருக்கொருவர் மீள்வாசிப்புச் செய்யவேண்டியவர்களாக இருக்கின்றோம். குற்றங்களை ஒப்புக் கொள்பவர்களாக இருக்கின்றோம்.

உலகம் முழுவதும் ஜனாஸா அடக்கம் செய்யப்படுகின்றபோது இலங்கையில் மட்டும் எரிக்கப்பட்டது தவறு. நாங்கள் எடுத்த முடிவு பிழை, நமது சுகாதாரத்துறையினரின் முடிவு பிழை, அரசியல் தலைவர்கள் எடுத்த முடிவு பிழை என்பதை ஒப்புக்கொள்பவராக இருக்கின்றோம்.

அதேபோன்றுதான் போர்க்காலங்களில் ஏற்பட்ட குற்றங்களில் உண்மை இருக்கின்றது என்றால் அதனை ஒப்புக்கொள்பவர்களாக இருக்கின்றோம். ஒப்புக்கொண்டு மன்னிப்பு கேட்டு அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து குற்றம் குறைகளை மன்னித்து சகல இனங்களும் ஒன்றாகச் சேர்ந்து இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்ற உணர்வு வரும்வரை ஒருபோதும் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

இனவாதம் நாட்டை அழித்திருக்கின்றது



என்பதை உணர்ந்துகொண்டு இனவாதமற்ற தேசத்தைக் கட்டியெழுப்புவோம் என்று அரசியல் தலைவர்களிலிருந்து எல்லோரும் திடசங்கற்பம் பூணும்போதுதான் இதனை உருவாக்க முடியும்.

கடந்த ஆட்சிக்காலத்தில் நல்லிணக்கத்தை உருவாக்க அமைச்சொன்று உருவாக்கப்பட்டது. இது வெறுமனே பொழுதுபோக்கிற்காக - கண்துடைப்பிற்காக உருவாக்கப்பட்டதாக இருக்கக்கூடாது. பெயர்ப்பலகை மாற்றுதல் நாடகத் தொடர்கள் தயாரிக்கப்படுகின்றன என்பதெல்லாம் பெயருக்கு செய்வதாக இருக்கக் கூடாது. உண்மையான நல்லிணக்கம் இந்த நாட்டில் உருவாகும்போது நாட்டின் பொருளாதாரம் சிறப்படையும்

நாட்டில் தூரநோக்குகொண்ட வீர் உருவாக்கப்பட வேண்டும். உதாரணமாக, நமது வாழ்க்கையை எடுத்துக்கொண்டால் ஐந்து வருடத்தில், பத்து வருடத்தில் என்ன செய்யப்போகிறோம், எவ்வாறு இருப்றோம் என்ற திட்டம் இருப்பதுபோல் ஒரு தேசத்திற்கும் விசன் தூரநோக்குப் பார்வை இருக்க வேண்டும்.

ஒரு அரசாங்கம் கொண்டுவருகின்ற தூரநோக்குப் பார்வை இன்னொரு அரசாங்கம் மாறுகின்றபோது இல்லாமல் போகின்றது. அது மாற்றப்பட வேண்டும். எந்த அரசாங்கம் வந்தாலும் முன்னெடுக்கப்படுகின்ற விசன் மாற்றப்படக்கூடாது. கடந்த அரசாங்கத்தில் விசன் 2025 திட்டம் தயாரிக்கப்பட்டது. அது எங்கே என்று தெரியவில்லை. ஒவ்வொரு அரசாங்கங்களும் சில முயற்சிகளை செய்வது பின்னர் கைவிடுவது இதுதான் நடக்கின்றது. இந்தப் பொறிமுறை மாற்றப்பட வேண்டும்.

அந்தவகையில் மத்திய கிழக்கு நாடுகளில் இது கடைப்பிடிக்கப்படுகின்றது. குறிப்பாக, சவூதி அரேபியாவில் 2050ஐ முன்னோக்கி நீம் சிட்டி என்கின்ற ஒரு திட்டத்தை முன்னெடுக்க பூர்வாங்க வேலைகளை ஆரம்பித்துள்ளனர். கற்பனை போன்ற ஒரு நகரம் நகரம் ஆரம்பிக்கப்படவுள்ளது. ஒரு திட்டம் தீட்டப்படுகிறது. ஒரு இலக்கு வைக்கப்படுகிறது. அதனை நோக்கி எல்லோரும் செல்கின்றார்கள்.

சிந்தித்துப் பார்க்கின்றபோது ஜனநாயகம் என்பது பொய்மை வாதமாகவும் தோன்றுகின்றது. 51 சதவீதம் ஜனநாயகமாக பார்க்கப்படுகிறது. இந்த ஜனநாயகம் உண்மைக்கு உண்மையான ஜனநாயகமாக இருக்கின்றதா? வாக்குகள் விற்கப்படுகின்ற, விலை பேசிப்படுகின்ற ஒரு சூழல் இருக்கின்றபோது ஜனநாயகத்தின் பண்புதான் என்ன என்பதை கேட்கத் தோன்றுகிறது.

முடியாட்சி என்பது ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியமானது என்ற எண்ணம் தோன்றுகிறது. இந்த விடயங்களை வெளிப்படையாகப் பேசுகிறேன். தேசிய இலக்குகள் இருக்கவேண்டும், ஆட்சிகள் மாறினாலும் அரசாங்கங்கள் மாறினாலும் இலக்கு ஒன்றாக இருக்கவேண்டும்.

இந்த நாடாளுமன்றத்தினால் எந்த அரசாங்கம் மாறினாலும் தொடர்ச்சியாக கொண்டுசெல்லப்படுகின்ற ஒரு திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

எமது நாட்டின் ஜனாதிபதி 2048இல் இலங்கையை வளர்ச்சியடைந்த நாடாக மாற்ற வேண்டும் என்கின்ற திட்டம் தன்னிடம் இருப்பதாகவும் அதனை காண்பதற்காக நான் உயிரோடு இருப்பேனா என்றும் அதனை முன்னெடுத்துச் செல்ல, அதனை கொண்டு செல்ல எல்லோரும் என்னோடு சேர்ந்து பயணியுங்கள் என்று குறிப்பிட்டுள்ளார். அவரின் கருத்து வரவேற்கத்தக்க கருத்தாகும்.

ஆனால், அதனை எவ்வாறு நாம் நடைமுறைப்படுத்துவது? அதனைக் கொண்டு செல்வதற்கான அரசியல் உபாயங்கள் என்ன?

இந்த நாடாளுமன்றத்தில் தேசிய சபை உருவாக்கப்பட்டுள்ளது நல்ல விடயம். தேர்தலில் ஒருவர் உருவாக்க வேண்டும் என்பதற்காக இது அமைக்கப்பட்டிருந்தால் அதில் எந்தப் பிரயோசனமும் இல்லை.

நாடாளுமன்றத்தில் பல குழுக்கள், அமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. அதில் என்ன முடிவுகள் என்ன வெற்றிகள் நடந்திருக்கின்றன என்றால் அது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

இந்த விடயங்களை இந்த தேசிய சபையினூடாக கொண்டு வாருங்கள். இந்த திட்டத்தைக் கொண்டு வருவதற்கான பொறுமுறையை - இலக்கை நடைமுறைப்படுத்துங்கள். ஆட்சியாளர்கள் மாறினாலும் அதிகாரம் மாறினாலும் இந்தத் திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கான வழிவகைகளை செய்யுங்கள்.

எம்மிடம் பலம் இருக்கின்றது.எதற்காக அலைந்து திரிகின்றோம். மாவட்ட அபிவிருத்திக் குழு ஒன்று இருக்கின்றது. இதில் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட சகல அரச நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்துகொள்கின்றார்கள். அங்கு எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் முழுமையாக நிறைவேற்றப்படுமாக இருந்தால் எவ்வளவு பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்கும்.

காணிகள் இல்லை, உண்பதற்கு அரிசி இல்லை. அதற்காக அரிசியை இறக்குமதி செய்கின்றோம் என்று கூறுகின்றார்கள். ஆனால், நம்மிடம் காணிகள் இருக்கின்றன. அந்த காணிகள் பொரஸ்ட் என்றும் வைலைப் என்றும் விடுவிக்கப்படாமல் இருக்கின்றன.

2006ஆம் ஆண்டும் 2010ஆம் ஆண்டும் வெளிவந்த வர்த்தமானி பத்திரிகை ஊடாக அந்தக் காணிகளில் விவசாயம் செய்ய முடியாமல் இருக்கின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலை உள்ளது. எத்தனை ஏழைகளின் காணிகள் சுவீகரிக்கப்பட்டு இருக்கின்றன.அந்தக் காணிகளில் அவர்கள் பயிர் செய்து விவசாயம் செய்வதற்கு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தபோதிலும் சில அதிகாரிகள் அதனை தடுத்திருக்கின்றார்கள்.

காணி இருக்கின்றது. காணி செய்வதற்கான நீர் இருக்கின்றது. அதனைச் செய்வதற்கான விவசாயிகள் தெம்போடு இருக்கின்றார்கள். ஆனால், அரசியலோ அதிகாரிகளோ இதில் தடையாக இருப்பது எந்த வகையில் ஏற்றுக்கொள்ளலாம்.

இதனால் எப்படி இந்த நாட்டில் உணவுப் பஞ்சம் தீரும். இன்று நாட்டில் எல்லாமே அப்படித்தான் இருக்கின்றது. இலங்கைத் தீவு நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ளது. ஆனால், நாங்கள் ரின் மீனை இறக்குமதி செய்கிறோம். நாம் இவ்வாறு தொடர்ந்தும் பேசிக்கொண்டிருக்க முடியாது மாற்றம் வேண்டும். ஒரு பல் குச்சியாக இருந்தாலும் அதனைக் கூட இறக்குமதி செய்கின்ற நிலையில் இருக்கின்றோம்.

1970ஆம் ஆண்டு உற்பத்திப் பொருளாதாரமே மேலோங்கி இருந்தது. அன்றைய உற்பத்திப் பொருளாதாரம், அப்படி இருக்குமாக இருந்திருந்தால் இன்று அபிவிருத்தியடைந்த நாடாக இருந்திருப்போம். எனவே, உற்பத்திப் பொருளாதாரத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

மஞ்சள் உற்பத்தியை வளர்ப்பதற்காக இறக்குமதி தடை வந்தபோது பலரும் பல விமர்சனங்களை செய்தார்கள். ஒரு கிலோவுக்கு 7,000 தொடக்கம் 8,000 ரூபா வரை விலை போனது. ஆனால், இன்று சந்தையில் மிக இலாபமாக குறைந்த விலையில் கிடைக்கின்றது.

இது நமது உற்பத்தி எவ்வளவு தடங்கல்கள் இருந்தாலும், பிரச்சினைகள் இருந்தாலும் நாமே உற்பத்தி செய்து உற்பத்திப் பொருளாதாரத்திற்கு வழி ஏற்படுத்துவோம். அதற்கு இந்த நாடாளுமன்றம் கால்கோலாக அமைய வேண்டும் - என்றார்.

# திருமலையில் மான்களால் அதிகளவு விபத்துகள்



(திருமலை நிருபா்)

திருகோணமலை கோணேஸ்வர ஆலயத்திலிருந்து மான்கள் திருகோணமலை நகர்ப்புறத்துக்கு அதிகமாக வருவதினால் விபத்துகள் அதிகரிக்கும் வாய்ப்புகள் காணப்படுவதாக புத்திஜீவிகள் குறிப்பிடுகின்றனர்.

மான்களுக்கு உண்பதற்குப் போதுமான உணவு இல்லாமையினாலேயே மான்கள் உணவைத் தேடி நகரை அறிவித்த பகுதியில் அங்குமிங்கும் அதிகளவில் நடமாடி வருகின்றன. இதனால் வீதி விபத்துகள் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதுடன், மான்கள் இறக்கும் விதமும் அதிகரித்துள்ளது.

அத்துடன், திருகோணமலை பொதுச் சந்தையில் காலையில் மான்கள் உணவைக் தேடி வருவதையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

இருந்தபோதிலும் மான்கள் அங்கும் இங்கும் சுற்றித்திரிந்து பொலித்தீன்களையும்



உட்கொண்டு வருகின்றதையும் அவதானிக்க கூடியதாகவும் எதிர்காலத்தில் மான்களை பாதுகாப்பதற்கு சிறந்த திட்டம் ஒன்றினை முன்னெடுக்க வேண்டும் எனவும் புத்திஜீவிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 'மனுதம் வியமன' வேலைத்திட்டத்தின்கீழ் 18 வெற்றியாளர்கள் தெரிவு



(மட்டக்களப்பு நிருபா்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 'மனுதம வியமன' வேலைத்திட்டத்தின்கீழ் 18 வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில், மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரனின் தலைமையில் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஒழுங்கமைப்பில் வெற்றியாளர்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

நாடளாவியரீதியில் உள்ள சிறிய ஆடை உற்பத்தியாளர்களை இனங்கண்டு அவர்களை வலுப்படுத்துவதற்காக யூனிலீவர் நிறுவனம் (சன்லைட்) மற்றும் சிங்கர் நிறுவனம் என்பன ஒன்றிணைந்து இலங்கை பூராகவும் உள்ள ஆடை தொழிற்றுறையில் ஈடுபடுபவர்களை மேம்படுத்துவதற்காக 'மனுதம் வியமன' வேலைத்திட்டத்தின் மூலம் இணையவழி பரீட்சை மற்றும் கள விஜயத்தின்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் 18 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வின்போது தெரிவுசெய்யப்பட்ட 18 ஆடை உற்பதியாளர்களுடன் அரசாங்க அதிபர் கலந்துரையாடி தனது வாழ்த்துகளைத் தெரிவித்து காசோலைகளையும் வழங்கியுள்ளார்.

இந்நிகழ்வின்போது மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், காத்தான்குடி பிரதேச செயலாளர் உ.உதயஸ்ரீதர், மண்முனை வடக்கு உதவி பிரதேச செயலாளர் எல்.பிரசாந்தன், மாவட்ட சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் மேற்பார்வை உத்தியோகத்தர் தி.நிலோஷன் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# முதலாம் தரத்திலிருந்தே ஆங்கிலம் கற்பிக்கப்படும் என்ற கருத்து பாராட்டத்தக்கது

## ஐக்கிய காங்கிரஸ் கட்சித் தலைவர் முபாரக் தெரிவிப்பு

(மாளிகைக்காடு நிருபா்)

முதலாம் தரத்திலிருந்து அனைத்து பாடசாலைகளிலும் ஆங்கில மொழி கல்வி போதிக்கப்படும் என்ற அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் கருத்து மிகவும் பாராட்டத்தக்கது



- என ஐக்கிய காங்கிரஸ் கட்சித் தலைவர் முபாரக் அப்துல் மஜீத் குறிப்பிட்டுள்ளார்.

இதுபற்றி கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் அனைவருக்குமான மூலக்கல்வி ஆங்கில மொழி. ஆங்கில மொழியை பிரகடனப்படுத்துவதன் மூலம் நாட்டில் மொழிப்பிரச்சினை தீர்வதுடன், சர்வதேச தொழில் வாய்ப்புகளை இலகுவில் பெற முடியும் என்பதை எமது ஐக்கிய காங்கிரஸ் கட்சி நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வந்துள்ளது. இப்போது எமது கோரிக்கை நிறைவேறவுள்ளதானது நல்லதொரு நிலையை தோற்றுவிக்கும்.

பொதுவாக நமது நாட்டின் செல்வந்தர்களின் பிள்ளைகள் ஆங்கில மொழிமூல கல்வி கற்று நல்ல பதவிகளில் வெளிநாடுகளில் பணி புரியும்போது ஏழைகளின் பிள்ளைகள் ஜி.சீ.ஈ. உயர்தரத்தின் பின்னரே ஆங்கில மொழியை தனியாக தேடிப்படிக்கும் நிலை உள்ளது. ஆங்கிலம் தெரியாத ஒரே காரணத்துக்காக பலரும் மிக சாதாரண தொழில்வாய்ப்புகளை வெளிநாடுகளில் பெறுகின்றனர்.

நமது நாட்டில் ஜி.சீ.ஈ. இறுதி வகுப்புகளில் கற்பிக்கப்படும் ஆங்கிலம் என்பது மாணவர்களுக்கு சாதாரண ஆங்கில அறிவை தருகின்றதே தவிர, சரளமாகப் பேசும், எழுதும் அறிவு இல்லை. இதனால் ஆரம்ப வகுப்பிலேயே ஆங்கில மொழியை போதிப்பது அவர்களுக்கு மிக இலகுவாக அமையும். இது எதிர்காலத்தில் அனைத்து பாடசாலைகளினதும் முதல் மொழியாக ஆங்கில மொழியை ஆக்கும் நல்லதொரு நிலையை உருவாக்கும் என நம்புகிறோம்.

கடந்த இரண்டு தசாப்த காலத்துள் கல்வி அமைச்சராக இருந்த சுசில் பிரேமஜயந்த மட்டுமே பல நல்ல விடயங்களை கல்வியில் செய்துள்ளார். இந்தவகையில் இது விடயத்தையும் அர்ப்பணிப்புடன் செயல்படுத்துவார் என்ற நம்பிக்கை எமது கட்சிக்கு உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



**முந்தநாள் கொடுத்த 37 இராஜாங்க அமைச்சர்களுக்கும் அபிவிருத்திக்கு எங்க இருந்து காச எடுப்பாங்க எண்டதயும் ஒள்ளுப்பம் நரில் ஐயா சொல்லுங்கோ.!**

**டீ.எஸ். ஒவீசில பட்டதாரி டீ.ஓ மாரு வேல இல்லாம குந்தி இருக்கிறமாதிரி எலுவா இம்பிட்டு அமைச்சர்மாரும் குந்தி இருக்கப்போறாங்க**

**ஆனா மட்டக்களப்புல உள்ள ரெண்டு இராஜாங்கங்களுக்கும் காசி தேவல்ல வாகனங்கள கொடுத்தா போதும் கொஞ்சம் மக்கள பேய்க்காட்டி புளைப்பாங்க எலுவா?**

# நலன்புரி நன்மைகள் செலுத்துவதற்கு தகுதியானவர்களை கண்டறிய வேலைத்திட்டம்



(மாளிகைக்காடு நிருபா்)

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின்கீழ் உள்ள நலன்புரி நன்மைகள் சபையின் நலன்புரி சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக சகல நலன்புரிக் கொடுப்பனவிற்கும் தகுதியான நபர்களை அடையாளம் காண்பதற்கான புதிய வேலைத் திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில், இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் நலன்புரி நிவாரண நன்மைக் கொடுப்பனவுக்குத் தகுதியான நபர்களை அடையாளம் காண்பதற்கான முதற் கட்ட வேலை தற்போது இடம்பெற்று வருகின்றது. இரண்டாம் கட்டாக இறக்காமம் - 03ஆம் கிராமசேவகர் பிரிவிற்கான நிகழ்வு வியாழக்கிழமை கிராம உத்தியோகத்தர் காரியாலயத்தில் இடம்பெற்றது.

பிரிவுக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர் யூ.எல்.அமீரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், திட்டத்திற்குப் பொறுப்பான சமூக சேவைப் பிரிவு பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எஸ்.எம்.எஹியால் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.றுமைஸ், சமூக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். ஜமீல் உட்பட சமூகசேவைப் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## உலக செய்திகள்



# தேவாலய பெட்டகத்தில் ஒன்றரை ஆண்டுகளாக

# ராணிக்காக காத்திருந்த இளவரசர் பிலிப்பின் உடல்

## எலிசபெத்தின் விருப்பப்படி ஒரேநேரத்தில் அருகருகே அடக்கம்

பிரித்தானிய மகாராணியாக 70 ஆண்டுகளாக கோலோச்சி இவ்வுலகை நீத்த ராணி இரண்டாம் எலிசபெத்தின் உடலும், அவரது மறைந்த கணவர் பிலிப்பின் உடலும் அரச மரியாதையுடன் அருகருகே நல்லடக்கம் செய்யப்படவுள்ளன.

இளவரசர் பிலிப் கடந்த 2021ஆம் ஆண்டு ஏப்ரல் 09ஆம் திகதி தனது 99ஆவது வயதில் காலமானார். அவரது உடல் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்குப் பின்னர், தி ரோயல் வோல்ட்டிலுள்ள தேவாலயத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது.

"தனது மரணத்துக்குப் பின்னர், தனது உடலும், மன்னர் பிலிப்பின் உடலும் அருகருகே நல்லடக்கம் செய்யப்பட வேண்டும்" என்பதுதான் ராணியின் விருப்பம். அந்தளவுக்கு பிலிப்பை அவர் காதலித்தார். அவருடைய விருப்பம் இப்போது நிறைவேற்றப்படவுள்ளது.

மகாராணியின் விருப்பப்படி, அவருடைய இறுதிப் பயணமும், மன்னரின் இறுதிப் பயணமும் ஒரே இடத்தில் நிறைவு பெறுவதற்கான தருணம் தற்போது வந்துவிட்டது. இவர்களின் இறுதிச்சடங்கு எதிர்வரும் 19ஆம் திகதி இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. விண்ட்ஸர் கோட்டையின் கிங் ஜோர்ஜ் ஆறாவது மெமோரியல் சேப்பலில் ராணி எலிசபெத் - இளவரசர் பிலிப்பின் உடல்கள் அருகருகே நல்லடக்கம் செய்யப்படவிருக்கின்றன.

இதற்காக, ராணி எலிசபெத்தின் மறைந்த கணவர் பிலிப்பின் உடலும் செயின்ட் ஜோர்ஜ் தேவாலயத்திலிருக்கும் ரோயல் வோல்ட்டிலிருந்து மெமோரியலுக்கு மாற்றப்படவுள்ளது. இங்குதான் ராணி இரண்டாம் எலிசபெத்தின் பெற்றோரான ஆறாம் ஜோர்ஜ், ராணி எலிசபெத்தின் உடல்களும், சகோதரி மார்கரெட்ன் உடலும் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

### பிரித்தானிய மன்னரானார் சார்ள்ஸ்

மகாராணி 2ஆம் எலிசபெத்தின் மறைவைத் தொடர்ந்து, புதிய மன்னராக 3ஆம் சார்ள்ஸ் அதிகாரப்பூர்வமாக பதவியேற்றுக்கொண்டுள்ளார்.

பிரிட்டன் பாரம்பரியமிக்க அரச குடும்பத்திற்கு தலைமை வகித்த ராணி 2ஆம் எலிசபெத் முதுமை மற்றும் உடல்நலக் குறைவால் தனது 96ஆவது வயதில் கடந்த 8ஆம் திகதி காலமனார். அவரது உடல், ஸ்கொட்லாந்தின் பல்மோரல் கோட்டை வீட்டில் வைக்கப்பட்டிருந்தது.

அரச குடும்பத்தினர் மரியாதைக்காக ஸ்காட்லாந்தில் வைக்கப்பட்டிருந்த ராணியின் உடல், நேற்று உலக நாட்டுத் தலைவர்களின் அஞ்சலிக்காக ஸ்கொட்லாந்திலிருந்து லண்டனுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

பல்வேறு சம்பிரதாய நடவடிக்கைகளுக்குப் பிறகு ராணியின் உடல் எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை அடக்கம் செய்யப்படும்.

ராணியின் மறைவைத் தொடர்ந்து, பிரித்தானிய அரச குடும்பத்தின் பதவி மாற்ற நிகழ்ச்சிகள் முறைப்படி நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. ராணி காலமானதுமே, புதிய மன்னராக அறிவிக்கப்பட்ட அவரது மகனும், வேல்ஸ் இளவரசருமான 3ஆம் சார்ள்ஸ் (வயது 73) நேற்று அதிகாரப்பூர்வமாக பிரித்தானிய மன்னராக பதவியேற்றார்.



மன்னராக பொறுப்பேற்ற சார்ள்ஸ்

லண்டனிலுள்ள செயிண்ட் ஜேம்ஸ் அரண்மனையில் முக்கிய பிரமுகர்களை உள்ளடக்கிய அக்சசன் கவுன்சில் கூட்டத்தில் பிரிட்டனின் மன்னராக சார்ள்ஸை அதிகாரப்பூர்வமாக அறிவித்து முழு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. இந்த அக்சசன் கவுன்சிலில், கடந்தகால மற்றும் தற்போதைய மூத்த எம்.பிக்கள், சில பொதுநலவாய (கொமன்வெல்த்) உயர் ஆணையர்கள் உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர். பதவியேற்பு நிகழ்வில், சார்ள்ஸின் மனைவி கமீலா (வயது 75), இளவரசர் வில்லியம்ஸ், பிரித்தானிய பிரதமர் லிஸ் ட்ரஸ், முன்னாள் பிரதமர்கள் உள்ளிட்டோர் திரளாக பங்கேற்றனர்.

முதலில், ராணி எலிசபெத்தின் மரணம் அக்சசன் கவுன்சிலில் அறிவிக்கப்பட்டு, பிரகடனம் வாசிக்கப்பட்டது. அதன் பிறகு, அந்தப் பிரகடனத்தில் பிரதமர் உட்பட பல மூத்த பிரமுகர்கள் கையெழுத்திட்டனர். இதனைத் தொடர்ந்து, உறுதிமொழியை வாசித்து மன்னர் சார்ள்ஸ் கையொப்பமிட்டார்.

பிரகடன ஆவணத்தில், ராணி கமீலா மற்றும் புதிய வேல்ஸ் இளவரசர் வில்லியம்ஸ் உட்பட குழு உறுப்பினர்கள் கையெழுத்திட்டனர்.

மன்னராக சார்ள்ஸ் பிரகனப்படுத்தப்பட்ட நிலையில், பாரம்பரிய முறையில் அணிவகுப்பு மரியாதை நடைபெற்றது. மேலும், 41 பீரங்கிக் குண்டுகள் முழங்க புதிய மன்னர் சார்ள்ஸுக்கு மரியாதை அளிக்கப்பட்டது.

வேல்ஸ் இளவரசராக 3ஆம் சார்ள்ஸும், வேல்ஸ் இளவரசியாக அவரது முதல் மனைவியான மறைந்த டயானாவும் இருந்தனர். ராணி எலிசபெத்தின் மறைவைத் தொடர்ந்து சார்ள்ஸ் மன்னராகி



விட்டதால், வேல்ஸ் இளவரசராக சார்ள்ஸின் மூத்த மகன் வில்லியம்ஸும், வேல்ஸ் இளவரசியாக வில்லியம்ஸின் மனைவி கேட் வில்லியம்ஸும் நியமிக்கப்பட்டனர்.

### தாயின் வழியை பின்பற்றுவேன்

மன்னராக பதவியேற்ற பிறகு சார்ள்ஸ் ஆற்றிய முதல் உரையில்,

“எனது தாயின் ஆட்சி, அவரது அர்ப்பணிப்பு நிகரற்றது. இந்தப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் அரசியலமைப்பை நிலைநிறுத்துவதற்கும், பிரித்தானியா மற்றும் கொமன்வெல்த் பகுதிகள் மற்றும் பிரதேசங்களின் மக்கள் அமைதி, நல்லிணக்கம், செழிப்பு ஆகியவற்றை பெறுவதற்கும் முன்மாதிரி செயற்பாடுகளை பின்பற்றுவேன். வாழ்நாள் முழுவதும் அன்பு மற்றும் சுயநலமற்ற சேவையின் உதாரணமாக திகழ்ந்த எனது தாயின் வழியை பின்பற்றி நடப்பேன்'' - என்றார்.

### முடிசூட்டல் எப்போது?

சார்ள்ஸ் மன்னராக பதவியேற்றாலும் பல மாதங்கள் கழித்தே புதிய அரசின் முடிசூட்டு விழா நடைபெறும். மறைந்த அரசிக்கு மரியாதை செலுத்தவும், விழாவை நடத்த அதிகாரிகளுக்குப் போதிய அவகாசம் அளிக்கும் வகையிலும் இந்தத் தாமதம் ஏற்படுகிறது.

இரண்டாம் எலிசபெத், 1952ஆம் ஆண்டு பெப்ரவரி 6ஆம் திகதி அரசியாக அறிவிக்கப்பட்டார். ஆனால், 1953ஆம் ஆண்டு ஜூன் 2ஆம் திகதியே அவர் அரசியாக முடிசூட்டிக்கொண்டார். மூன்றாம் சார்ள்ஸ் அரசராக முடிசூட்டிக்கொள்வது எப்போது என்பது தொடர்பான தகவல்கள் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

### மாறும் தேசிய கீதம் - நாணயம் - கடவுச்சீட்டு

புதிய மன்னராக சார்ள்ஸ் அறிவிக்கப்பட்டதால், அந்த நாட்டின் தேசிய கீதம், நாணயம், கடவுச்சீட்டு உள்ளிட்டவை மாறுகின்றன. பிரித்தானிய நாணயங்கள், கரன்சியில் மகாராணி எலிசபெத்தின் உருவப்படம் இடம்பெற்றிருக்கும் நிலையில், இனி அச்சிடப்படுபவற்றில் மன்னர் சார்ள்ஸின் படம் இடம்பெறும். அடுத்த 2 ஆண்டுகளில் புதிய நாணயம், கரன்சிகள் புழக்கத்தில் இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல், பாஸ்போர்ட், தபால் தலைகள் ஆகியவற்றிலும் சார்ள்ஸை முன்னிறுத்தி மாற்றங்கள் செய்யப்படவுள்ளன. மேலும், "கோட் சேவ் தி குயின்" என பாடப்பட்ட பிரிட்டன் தேசிய கீதத்தின் வரிகள், “கோட் சேவ் தி கிங்'' என்று இனி பாடப்படவுள்ளது.

### கமீலாவின் வசமாகும் கோஹினூர் கிரீடம்

மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் மறைவையடுத்து கோஹினூர் கிரீடம் புதிய மன்னரான சார்ள்ஸின் மனைவி கமீலா வசம் செல்லும் என தகவல் வெளியாகியுள்ளது.

2,800 வைர கற்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள அந்த கிரீடத்தில், 105 கெரட் கோஹினூர் வைரம் பொருத்தப்பட்டுள்ளது. இந்தக் கிரீடம் 1937ஆம் ஆண்டு ஆறாம் ஜோர்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாவுக்காக உருவாக்கப்பட்டது.

இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட அந்த வைரம், 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் ஆங்கிலேயர்களின் கைகளுக்குச் சென்றது. கடந்த காலங்களில் இந்தியா அந்த வைரத்தை திரும்பக் கோரியபோது அது தங்களுக்கு சொந்தமானது எனக்கூறி பிரித்தானியா மறுத்தமை குப்பிடத்தக்கது.

### மீண்டும் ஒன்றுசேர்ந்த அரச குடும்பம்

ராணி இரண்டாம் எலிசபெத்தின் மறைவையடுத்து பிரிந்திருந்த அரச குடும்பம் மீண்டும் ஒன்றுசேர்ந்துள்ளது.

இளவரசர் வில்லியம்ஸ் - கேட் மிடில்டன், இளவரசர் ஹரி - மேகன் மார்க்கல் ஆகியோர் மீண்டும் ஒன்றிணைந்துள்ளனர்.

ஒருகாலத்தில் அற்புதமான நால்வர் என்று



அழைக்கப்பட்ட இவ்விரு தம்பதியரும் கடந்த இரண்டு ஆண்டுகளாக பொது இடத்தில் ஒன்றாகக் காட்சியளிக்கவில்லை.

ராணி எலிசபெத் நினைவாக எஸ்டேட் வாசலில் வைக்கப்பட்ட மலர்வளையங்களைப் பார்வையிட நால்வரும் ஒன்றாக காட்சியளித்தனர்.

### 8 பேரக் குழந்தைகள் 12 கொள்ளுப் பேரன்கள்

இளவரசர் பிலிப் கடந்த 2021ஆம் ஆண்டு இறந்தபோது, அவருடன் 73 ஆண்டுகளுக்கும் மேலாக ராணி எலிசபெத் வாழ்ந்துள்ளார். இதன்மூலம், 69 ஆண்டு 62 நாட்கள் பதவிக் காலத்துடன் ராணியுடன் மிக நீண்ட காலம் வாழ்ந்த கணவர் என்ற பெருமையை பிலிப் பெற்றார். பிலிப் - எலிசபெத் தம்பதிக்கு 4 குழந்தைகள், 8 பேரக் குழந்தைகள் மற்றும் 12 கொள்ளுப் பேரன்கள் உள்ளனர்.

எலிசபெத் தனது ஆட்சிக்காலத்தில் 82 முறை அரச முறைப்பயணமாக வெளிநாடு சென்றுள்ளார். கடந்த 2015ஆம் ஆண்டு தனது 89ஆவது வயதுடன் வெளிநாட்டுப் பயணங்களை அவர் தவிர்த்துவிட்டார்.

### இளவரசர் - இளவரசியாகும் ஹரியின் குழந்தைகள்

மன்னராகியுள்ள 3ஆம் சார்ள்ஸின் முதல் மனைவி டயானா. இவர்களின் மகன்களான இளவரசர்கள் வில்லியம்ஸ் மற்றும் ஹரி. இதில் இளவரசர் ஹரி, அமெரிக்காவைச் சேர்ந்த நடிகை மேகனை காதலித்து திருமணம் செய்துகொண்டார். சில காலம், பெக்கிங்ஹாம் அரண்மனையில் வாழ்ந்த ஹரி - மேகன் தம்பதி பின்னர் அரச குடும்பத்திலிருந்து வெளியேறுவதாக அறிவித்து அமெரிக்காவில் குடிபெயர்ந்தனர்.

பின்னர் அவர்கள் பிரித்தானிய அரச குடும்பத்தைப் பற்றி கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். தங்களது குழந்தைகளுக்கு அரச பதவி மறுக்கப்படுவதாகவும் குற்றஞ்சாட்டினார். தற்போது ராணி எலிசபெத் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து, வாரிசு அடிப்படையில் ஹரியின் மகன் ஆர்ச்சி, மவுண்ட்பேட்டன் விண்ட்சரிலிருந்து இளவரசாகவும், மகள் லில்லிபெட் மவுண்ட்பேட்டன் விண்ட்சரிலிருந்து இளவரசியாகவும் பதவி பெற்றுள்ளனர்.

### வீழ்ந்தது லண்டன் பாலம்

அரச குடும்பத்தைப் பொறுத்தவரை எல்லாமே திட்டமிட்டபடியே நடக்கும். அதேபோல், ராணி எலிசபெத் மரணம் ஏற்படும்போது, எப்படி நடக்கவேண்டுமென சில மாதங்களுக்கு முன்பே திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கு 'ஓபரேஷன் லண்டன் பிரிட்ஜ்' என பெயரிட்டுள்ளனர். ராணி இறந்த செய்தியை அவரது தனிப்பட்ட செயலாளர், பிரித்தானிய பிரதமருக்கு 'லண்டன் பாலம் வீழ்ந்தது' என்ற சங்கேத வார்த்தையுடன் தெரிவிப்பார். ராணி இறப்பு தினம் 'டி டே' என குறிப்பிடப்படும். அதைத் தொடர்ந்து, அரச தரப்பில் அதிகாரப்பூர்வ செய்தி வெளியிடப்படும். பெக்கிங்ஹாம் அரண்மனை நுழைவாயில் கேட்டில், ராணி இறப்பு அறிவிப்பு வைக்கப்படும். அனைத்து தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள் ஒளி - ஒலிபரப்பு நிறுத்தப்படும். ராணி இறப்பு தகவல் வெளியிடப்படும். அன்றைய தினமே 3ஆம் சார்ள்ஸ் புதிய மன்னராக பொறுப்பேற்பார் என திட்டமிடப்பட்டிருந்தது.

ராணி எலிசபெத் ஸ்கொட்லாந்து பல்மோரல் அரண்மனையில் உயிரிழந்ததால், அவரது உடல் ரயில் வாயிலாக லண்டன் எடுத்துவரப்படும். இதை, 'ஓபரேஷன் யூனிகார்ன்' என்று அழைக்கின்றனர். பெக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து, லண்டன் நாடாளுமன்றமான வெஸ்ட் மினிஸ்டர் அரண்மனைக்கு ராணியின் உடல் ஊர்வலமாக எடுத்துச்செல்லும் நிகழ்வு, 'ஓபரேஷன் லயன்' என்று அழைக்கப்படுகிறது. வெஸ்ட் மினிஸ்டர் அரண்மனையில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு, அதன் அருகே உள்ள தேவாலயத்தில் முழு அரச மரியாதையுடன் ராணியின் இறுதிச்சடங்குகள் நடக்கும்.

### 15 பிரதமர்களைக் கண்ட ராணி

எலிசபெத் தனது பதவிக்காலத்தில் 15 பிரதமர்களை கண்டுள்ளார். கடந்த 1952 - 1955 வரை பதவி வகித்த வின்ஸ்டன் சர்ச்சில் எலிசபெத் பதவிக்காலத்தில் பொறுப்பேற்ற முதல் பிரதமர். கடைசியாக தற்போதைய பிரதமர் லிஸ் ட்ரஸை கடந்த செவ்வாய்க்கிழமை பிரதமராக எலிசபெத் நியமித்தார். இதுதான், எலிசபெத் பங்கேற்ற கடைசி நிகழ்ச்சி என்பது குறிப்பிடத்தக்கது.

### 35 நாட்டு நாணயத்தில் உருவம்

பொதுநலவாய நாடுகளின் தலைவரான ராணி எலிசபெத்தின் உருவம் 33 நாடுகளின் நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், அதிக உலக நாணயங்களில் இடம்பெற்ற நபர் என்ற சாதனைக்கும் ராணியே சொந்தக்காரர். அதிக ஒலிம்பிக்கை தொடங்கிவைத்தார். ஒன்றுக்கும் மேற்பட்ட ஒலிம்பிக் போட்டிகளை தொடங்கிவைத்த ஒரே நபர் என்ற சிறப்பையும் ராணி எலிசபெத் பெற்றுள்ளார். இவர் 1976 மாண்ட்ரீல் ஒலிம்பிக் மற்றும் 2012 லண்டன் ஒலிம்பிக் போட்டிகளை ஆரம்பித்துவைத்துள்ளார்.

### உலகப் போரில் பங்கேற்றவர்

மகாராணி எலிசபெத் அரண்மனையில் வாழ்ந்து வெறும் சொகுசு வாழ்க்கையை மட்டும் அனுபவித்தவர் அல்லர். 2ஆம் உலகப் போரில் பிரிட்டன் இராணுவத்தில் சேர்ந்து நாட்டுக்காக சேவை புரிந்தவர். பிரித்தானிய மன்னர் பரம்பரையில் இராணுவ சேவையாற்றிய ஒரே ராணி, ராணி எலிசபெத் மட்டுமே. அதுவும் 18ஆவது வயதிலேயே இராணுவத்தில் இருந்துள்ளார். அப்போது, ட்ரெக்குகளின் டயர்களை கழற்றி மாட்டுவது உள்ளிட்ட சில மெக்கானிக் வேலைகளையும் கற்றுத் தேர்ந்தவர். தனது 14ஆவது வயதிலேயே துப்பாக்கி சுட கற்றுக் கொண்டவர்.





மகாராணியின் உடல் ஸ்கொட்லாந்தின் பல்மோரல் கோட்டையிலிருந்து ஹொலிரூட்ஸ் ஹவுஸ் அரண்மனைக்கு கொண்டுசெல்லப்பட்டபோது.....

### ரூ. 7,000 கோடிக்கு அதிபதி

ராணி எலிசபெத்தின் தனிப்பட்ட சொத்து மதிப்பு ரூ.3,300 கோடியாகும். இது 2017இல் வெளியிட்ட அதிகாரப்பூர்வ அறிவிப்பு. இப்போது கிட்டத்தட்ட ரூ.7,000 கோடி இருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது அனைத்தும் புதிய மன்னர் 3ஆம் சார்ள்ஸுக்கு கிடைக்கும். இதுதவிர அரச குடும்பத்திற்கு அசையா சொத்து ரூ.2.2 இலட்சம் கோடிக்கு இருக்கிறது.

### 'பாஸ்போர்ட்' இல்லாதவர்

கடவுச்சீட்டு இல்லாமல் உலகின் எந்த நாட்டிற்கும் செல்லக்கூடிய அதிகாரம் படைத்தவர் ராணி எலிசபெத். பிரித்தானிய அரச குடும்பத்தில் மற்ற அனைவருக்கும் கடவுச்சீட்டு தேவை. ஆனால், கடவுச்சீட்டில் அதிகாரப்பூர்வ கையெழுத்திடுபவரான எலிசபெத்துக்கு பாஸ்போர்ட் தேவையில்லை. அதேபோல, பிரித்தானியாவில் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனம் ஓட்டக்கூடிய அதிகாரமும் ராணிக்கு உண்டு.

### பொது விடுமுறை

மகாராணியின் இறுதிச்சடங்கு இடம்பெறும் தினத்தை, பொது அரச விடுமுறையாக அறிவிப்பதற்கு மன்னர் சார்ள்ஸ் நேற்றுமுன்தினம் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

இறுதிச்சடங்கில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கலந்து கொள்ளவுள்ளார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7